
# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்-16



*Source : Labour File Jan-April 2007*
*(bimonthly journal )*

**தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு**

# கிராம ஊராட்சியின் அதிகாரங்கள்-I




தகவல் உரிமைச் சட்டத்தின்படி எந்த பொது அதிகாரத்துவ அமைப்பிடமிருந்தும் தகவல்களைப் பெற, அளிக்க கிராம ஊராட்சி கடமைப்பட்டதாகும்



ஊராட்சிகள் சம்மந்தப்பட்ட எந்த ஒரு பொருண்மைகள் மீதும் தகவல் கேட்டு பெற செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு






கிராம ஊராட்சி நிதியிலிருந்து கொடுக்கப்படும் எல்லா காசோலைகளும் தலைவரால் கையொப்பமிடப் படவேண்டும்




கிராம ஊராட்சி தலைவரால் ஊராட்சி கூட்டம் நடத்தப்படுதல் வேண்டும்



தொழிற்சாலை கட்டுவதற்கும் அதில் இயந்திரங்கள் அமைப்பதற்கும் ஊராட்சியிடம் அனுமதி பெற வேண்டும்



தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்ட பயனாளிகளை தேர்வு செய்ய, திட்டங்களை நடைமுறைப்படுத்த, ஊதியத்தை பெற்றுத்தர ஊராட்சி அதிகாரம் பெற்றிருக்கிறது

வெளியீடு: மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு(HRF)
எண்.10,தாமஸ் நகர், சைதாப்பேட்டை,சென்னை-15. 044-22353503

தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்புக்காக

# உள்ளாட்சி அரசாங்கமே முதல் அரசாங்கம்

## 1. மேம்பாடும் மக்கள் அதிகாரமும்

உள்ளாட்சி அதிகாரம் என்பது மக்களின் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்துக்குத் தேவைப்படுவதாகும். அதிகாரங்களையும் செயல்முறைகளையும் நிதியையும் பரவலாக்குவது என்பது, செல்வமும் அதிகாரமும் வருமானமும் ஒரே இடத்தில் குவிவதைத் தடுப்பதோடும் சமத்துவமற்ற நிலைமைகளுக்கும் தீண்டாமைக் கொடுமைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் எதிரான போராட்டத்தோடும் இணைந்ததாகும், அல்லது அதற்கு முனனோடியானதாகும். மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்தை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய அமைப்பாக இருப்பது கிராம சபை. சுரண்டப்படுகிற, ஒதுக்கிவைக்கப்ட்ட சமூகங்கள் தொடரும் சமத்துவமின்மைகளையும் தங்களின் சுதந்திரம் மறுக்கப்படுவதையும் பாகுபாடுகளையும் சமூக அநீதிகளையும் எதிர்த்துத் தங்களது குரலை எழுப்புவதற்கு மக்களின் இந்த நிறுவன அமைப்பு வாய்ப்புகளை அளிக்கிறது. தற்போது உள்ள அதிகாரப் பரவல் ஆட்சிமுறையானது சாதி, வர்க்கம் மற்றும் பாலின அடிப்படையிலான சமத்துவமின்மைகளுக்கு சாதகமாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள், தலித்துகள், பழங்குடியினர் ஆகியோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் பங்கேற்பு ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்குமான வாய்ப்பைத் தட்டிப்பறிப்பதாக இருக்கிறது.

கிராம சபைகளுக்கான மற்றொரு களமாக அமைந்திருப்பது உள்ளாட்சித் தேர்தல்களாகும். இதன் மூலம் மக்கள் தங்களது விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்கள், கிராம அளவிலும் இதர உள்ளாட்சி அமைப்புகளிலும் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். கிராம மக்கள் நலன்களில், குறிப்பாக வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்கள் மற்றும் பாகுபாடுகளால் ஒதுக்கப்பட்டவர்களின் நலன்களில் அக்கறையும் ஈடுபாடும் உள்ளவர்களை பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். தலித்துகள், பெண்கள், பழங்குடியினர், உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்த இதர பிரிவினர், சிறுபான்மையினர் ஆகியோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான ஒரு தளத்தை இது வழங்குகிறது. இவர்கள் தங்களது உரிமைகளுக்கான செயல்திட்டத்தை முன்வைப்பதற்கான தளத்தை வழங்குகிறது. தங்களது உரிமைகள் தொடர்ந்து மீறப்படுவதையும் மறுக்கப்படுவதையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வியூகங்களை மையமான இடத்திற்குக் கொண்டுவருவதற்கான தளத்தையும் இது வழங்குகிறது.

தமிழ்நாட்டில் கிராம ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படை அற்றதாகவே நடைபெறுகின்றன. ஆயினும், உண்மை நடைமுறையில் அரசியல் கட்சிகள் சாதி, அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவதில் பெருமளவுக்கு ஈடுபடுகின்றன. இதனால் மக்கள் தங்களது விருப்பையும் மறுப்பையும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது.

அதிகமான அதிகாரங்கள் அரசிடம் குவிக்கப்பட்டு, அடக்கு முறைகளும் சுரண்டல்களும் பெருகிக்கொண்டிருக்கும் பின்னணியில் அரசமைப்பு சாசனத்துக்கான 72, 73-வது திருத்தங்கள் மக்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும் அடிமட்டத்தில் ஜனநாயகத்தைக் கட்டுவதிலும் சட்டவரம்புகளுக்கு உட்பட்ட ஒரு முக்கிய அஸ்திவாரமாக அமைந்துள்ளன. இவை உண்மை நடப்புகளாக மாறவேண்டுமானால், தொடர்ச்சியான மேம்பாடு, பங்கேற்பு ஜனநாயகம் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவையாகும், வேறுபடுத்த முடியாதவையாகும். அடிமட்டத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்துவது, கூட்டாட்சி என்பதை மறுவரையறை செய்வது ஆகியவை அதிகாரங்களைப் பரவலாக்குவதாக மட்டுமல்லாமல், உழைக்கும் வர்க்கத்தையும் ஏழை மக்களின் இதர பிரிவினரையும் அணிதிரட்டி அதிகாரம் வழங்குவதாகவும் இருக்க வேண்டும். இது அரசமைப்பு சாசனத்தின் ஒரு முக்கியமான இலக்காகும்; உயர்ந்த தன்னாளுமை, சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை நோக்கிய பயணத்தோடு இணைந்ததாகும். தற்சார்பு மற்றும் உயர் தன்னாளுமை உரிமை என்ற இலக்கை அடைவதற்காக, மக்கள் தங்கள் சமூக அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும், தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், சுரண்டலுக்கு எதிராகப் போராடவும், சமத்துவமற்ற அடக்குமுறை சார்ந்த அதிகார உறவுகளுக்கு எதிராகப் போராடவும், மனித உரிமைகளை மேம்படுத்தவும், சமூக உடைமைகளைப் பாதுகாக்கவும் பஞ்சாயத்துகள், நகராட்சிகள் ஆகியவை புதிய திட்டத்தின் கீழ் மிக முக்கியமான அமைப்புகளாகியுள்ளன.

அதே நேரத்தில், இந்த அரசமைப்பு சாசனம் அடிப்படையிலான திட்டம் முழுமையானது என்று சொல்வதற்கில்லை. உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக மாநில அரசுகள் கொண்டுவரும் சட்டங்கள் அதிகாரங்களைப் பரவலாக்கும் அரசமைப்பு சாசனத் திட்டத்தை மாநிலங்களில் கறாராக அமலாக்கச் செய்ய வைப்பதில் பற்றாக்குறையாகவே உள்ளது. அதிகாரங்களை மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் என பங்கீடு செய்வது தொடர்பாக அரசமைப்பு சாசனத்தின் 1,2,3 ஆகிய பட்டியல்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்கான 4-வது பட்டியலைச் செயல்படுத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதைத் தெளிவாக வரையறுக்கத் தவறியிருப்பது, பல மாநில அரசு எந்த அளவுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கினால் போதும் என்று கருதுகிறதோ, எந்த அளவுக்கு அது தனக்குப் பாதுகாப்பானது என்று நினைக்கிறதோ அந்த அளவுக்கு மட்டும் நடவடிக்கைகள் எடுத்தால் போதும் என்ற நிலைமையை பல மாநிலங்களில் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில், 73வது சட்டத்திருத்தத்தில் உள்ள 29 அதிகாரங்களும் 74வது சட்டத்திருத்தத்தில் உள்ள 18 அதிகாரங்களும் 1994ம் ஆண்டின் தமிழக பஞ்சாயத்துச் சட்டத்தில் திருத்தம் செய்வதன் வாயிலாக உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படவில்லை. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடுகள், மாநில நிதி ஆணையம் அமைத்தல், மாநில தேர்தல் ஆணையம் அமைத்தல் போன்ற கட்டாயமாகச் செய்தாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், உள்ளாட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அதிகாரமற்றவர்களாக, பல்வேறு திட்டங்கள் அமலாக்கப்படுவதிலும் பொதுப் பணிகளிலும் அதிகாரிகளுக்கு உதவுகிறவர்கள் என்பதாக மட்டுமே, அவ்வப்போது அரசாணைகள் மட்டும் வெளியிடுவதன் மூலம் அதிகாரப் பரவல் என்பதைச் சுருக்கியுள்ளது தமிழக அரசு. இன்று வரையில் அதிகாரங்களோ, நிதியோ, மாநில அரசுப் பணியாளர் ஏற்பாடுகளோ பரவலாக்கப்படவில்லை. அவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் ஆய்வுக்கு உட்பட்டவையாக ஆக்கப்படவில்லை. அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஆட்சி நிர்வாகத்துக்கான 4-வது பட்டியலைச் சேர்க்கத்தவறியதன் விளைவாக உள்ளாட்சி அமைப்புகள் தற்சார்பு, தாவாக்களுக்குத் தீர்வு போன்ற முக்கியமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரமற்ற அமைப்புகளாகவே உள்ளன. ஆகவே, உள்ளாட்சி அமைப்புகள் சார்பாக அரசாணைகள் உள்பட அனைத்துச் சட்டங்களையும் மாநில அரசோ மத்திய அரசோதான் உருவாக்குகின்றன.

சுருக்கமாக, தமிழ்நாட்டில், ஊரகப் பகுதிகள், நகரப் பகுதிகள் இரண்டிலும் உள்ளாட்சி அமைப்புகள் அதிகார வர்க்கத்தினரின் கட்டுப்படுத்தும் அதிகாரங்களுக்கு உட்பட்டுதான் செயல்படுகின்றன. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் மட்டுமே இதற்கு விதிவிலக்கு. அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக மட்டுமல்லாமல், கிராமப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரங்கள் கொண்டவராகவும் இருக்கிறார். முன்பு வட்டார வளர்ச்சி அலுவலக அதிகாரிகளிடம் இருந்த பல அதிகாரங்கள் 1996-ம் ஆண்டில் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு கிராமப் பஞ்சாயத்துத் தலைவரின் அதிகாரத்துக்கு மாற்றப்பட்டுவிட்டன.

## 2. தமிழ்நாடு 1994 பஞ்சாயத்துச் சட்டமும், அரசின் பதிலும்

1958-ம் ஆண்டின் தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1992ல் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்திற்குப் பிறகு ஆண்டின் தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம்-1994 என மாற்றப்பட்டுவிட்டது. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம்1958-ன் கீழ் 262 பிரிவுகள் இருந்தன. ஆனால் 1994-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் 216 பழைய பிரிவுகள் மட்டுமே உள்ளன. 48 பிரிவுகள் நீக்கப்பட்டுவிட்டன. புதிதாக இருப்பது என்னவென்றால் 1994-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் எஸ்சி/எஸ்டி மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு, கிராம சபை கூட்டப்படுவது சட்டப்பூர்வமாக்கப்பட்டிருப்பது, மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டிருப்பது, மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டிருப்பது ஆகியவை மட்டுமே. இவை அரசமைப்புச் சட்டத்தின் கீழ் கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டியவையாகும்.

அதிகாரங்களைப் பொறுத்த வரையில் 1958-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் என்ன அதிகாரங்கள் இருந்தனவோ அதே அதிகாரங்கள் 1994 சட்டத்திலும் இருக்கின்றன. 1958-ம் ஆண்டுச் சட்டமே போதுமானது என்பதும், 73-வது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் கீழ் செய்தாக வேண்டிய சில தேவைகளை நிறைவு செய்ய, 1958-ம் ஆண்டுச் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்தால் போதும் என்பதும் பல வல்லுநர்களின் கருத்தாகும். ஆனால், 1981-ம் ஆண்டிலிருந்தே உள்ளாட்சிகளிடமிருந்து பல அதிகாரங்கள் திட்டமிட்ட முறையில் நீர்த்துப் போகச் செய்யப்பட்டு வந்துள்ளன. 1981-ல் பஞ்சாயத்து அதிகாரங்களிலிருந்து (ஒன்றியம் மற்றும் கிராமப் பஞ்சாயத்துகள்) கல்வி அகற்றப்பட்டது. 1992-ல் பொது சுகாதாரம் அகற்றப்பட்டது. அதே போல் கூட்டுறவு, கால்நடைப் பராமரிப்பு மற்றும் இதர

பல அதிகாரங்கள் அகற்றப்பட்டன. ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியவற்றிடம் இருந்த பல அதிகாரங்கள் அகற்றப்பட்டுவிட்டன. ஒரு காலகட்டத்தில், மாவட்ட ஊராட்சிப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளை விட முக்கியமானவையாக இருந்தன. எனவே, 1994ம் ஆண்டுச் சட்டம் உண்மையில் முந்தைய சட்டத்தின் கீழ் இருந்த பல அதிகாரங்கள் விலக்கப்பட்டதை உறுதிப்படுத்தவே செய்தது.

1990-ம் ஆண்டு நிதிஅதிகாரம் பரவலாக்குதல் தொடர்பாக அமைக்கப்பட்ட தாமோதரன் குழு சுகாதாரம். கல்வி போன்ற அதிகாரங்களை ஊராட்சிகளிடமிருந்து விலக்கியது சரியல்ல என்றும் அவற்றை உடனடியாக மீண்டும் வழங்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 243-ஜி பிரிவு மாநில சட்டமன்றமானது, அரசமைப்புச் சட்டத்தின் 9-வது பட்டியலில் உள்ள 29 அதிகாரங்களை சட்டத்தின் மூலமாக பரவலாக்கலாம் என்றுதான் சொல்கிறது. மாநில அரசுகள் கட்டாயமாக அவற்றைப் பரவலாக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இதனால், தமிழகத்தில் அந்த அதிகாரங்கள் ஊராட்சிகளுக்குப் பரவலாக்கப்படவில்லை.

எல்.சி. ஜெயின் கமிட்டி தனது அறிக்கையில் எந்தெந்த அதிகாரங்கள் பரவலாக்க வேண்டும், எப்படிப் பரவலாக்க வேண்டும், எப்போது பரவலாக்க வேண்டும், அத்துடன் எவ்வாறு அலுவலர்கள் பிரித்தளிக்கப்படவேண்டும் என்று விரிவாகக் கூறியிருக்கிறது. ஆனால் அந்த அறிக்கையின் அடிப்படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும், 1994 சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்களின் படி கிராம சபைகள் பட்ஜெட் தயாரிக்க முடியும், கண்காணிக்க முடியும், செலவிட முடியும். திட்டமிட முடியும், பொதுப்பணிகள் நடைபெறுவதை ஆய்வுக்கு உட்படுத்தமுடியும். ஆனால் அதிகாரங்களைப் பரவலாக்குவது கட்டாயமாக்கப்படவில்லை என்பதால் இவை ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை.

சட்டப்பூர்வமாக அதிகாரங்களைப் பரவலாக்குவது என்பது தமிழ்நாட்டில் நடைமுறையில் கொஞ்சமும் இல்லை. 1996-ம் ஆண்டு ஊரக மேம்பாட்டுத் துறை 15.10.1996 தேதியிட்ட அரசாணை எண் 225-ல் ஒரு மாறுபாடு உண்டு. அதன் கீழ் சிற்றூராட்சித் தலைவர்களுக்கு அது வரையில் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் இருந்து வந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆயினும், அடுத்தடுத்து வந்த அரசுகள் மூன்றடுக்கு உள்ளாட்சிகளுக்கு 1994-ம் ஆண்டு29 அதிகாரங்களை வழங்க மறுத்து வந்துள்ளன. இதனால் தமிழ்நாட்டில் அதிகாரப்பரவல் என்பதும் அதிகாரக்குவிப்பை மாற்றுவது என்பதும் குழப்படியாகவே இருந்துவருகிறன. செயல்படுத்துவதற்கான அலுவலர் ஏற்பாடுகளோ நிதி ஏற்பாடுகளோ பரவலாக்கப்படவில்லை. பஞ்சாயத்துத் தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிற “உதவி” நடவடிக்கைகள் அனைத்தும் 400-க்கும் மேற்பட்ட அரசாணைகள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இது அதிகாரப் பரவல் என்ற கோரிக்கைக்கு எவ்விதத்திலும் பயனளிப்பதாக இல்லை.

இதையெல்லாம் விட மோசமானதாக, ஒரு பஞ்சாயத்துத் தலைவரை ஒரு ஆய்வாளர் (மாவட்ட ஆட்சியர்) 1994-ம் ஆண்டுச் சட்டத்தின் 205-வது பிரிவின் கீழ் (பாகம் 10) பதவி நீக்கம் செய்ய முடியும். இது பஞ்சாயத்து அரசாங்கம் என்பதை மீறுவதாகும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதியை நீக்கலாம் என்பதற்கு ஊரக வளர்ச்சித் துறை செயலர் வித்தியாசமான விளக்கம் அளித்துள்ளார். தலித் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் ஆகியற்றின் பிரதிநிதிகளுக்கும் அவருக்கும் இடையே நடந்த ஒரு சந்திப்பின்போது அவர், கிராமத் தலைவருக்கு நிர்வாக அதிகாரம் தரப்பட்டிருப்பதாகவும், இந்த நிர்வாக அதிகாரம்தான் உயர் அதிகாரம் கொண்ட ஒரு அதிகாரி, தம்மை விட கீழ்நிலை அதிகாரம் கொண்ட ஒருவரை (பஞ்சாயத்துத் தலைவரை) ஊரக வளர்ச்சித் துறை செயலருக்குப் பரிந்துரை செய்வதன் மூலம் நீக்குவதற்கு வழிவகுப்பதாகவும் கூறினார் அவர்!

இது, உள்ளாட்சி அரசாங்கங்களின் செயல்பாட்டில் உயர் நிர்வாக அதிகாரிகளுக்கு உள்ள விசுவாசம் எப்படிப்பட்டது என்பதையே காட்டுகிறது, எனினும் கேரளத்தில் கிராமப் பஞ்சாயத்துகளின் அதிகாரங்கள் தொடர்பாக பஞ்சாயத்து சட்டத்தில் தனி பிரிவு இருக்கிறது. பஞ்சாயத்து சட்டத்தின் 3-வது அட்டவணையின் 166-வது பிரிவு வரையறுக்கப்பட்ட விஷயங்களில் நிர்வாக அதிகாரம், வேலைவாய்ப்பு வசதிகளை பயன்படுத்தும் அதிகாரம், மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் ஆகியவற்றை வழங்குகிறது. தேவையான நிதி, தொழில்நுட்ப உதவி, இதர உதவிகள் ஆகியவற்றையும் 3-வது அட்டவணை வழங்குகிறது. அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியுதவி கிடைக்கச் செய்கிறது. கிராமப் பஞ்சாயத்தின் 3-வது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களோடு தொடர்பு உள்ள அனைத்து அமைப்புகள், திட்டங்கள், கட்டிடங்கள், இதர உடைமைகள், சொத்துக்கள், பொறுப்புகள் ஆகியற்றை பஞ்சாயத்துக்கு மாற்றவும் வழிசெய்யப்பட்டிருக்கிறது.

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், அவற்றை செயல்படுத்துவதற்கு ஆணையிடுவதில் தமிழக அரசு எவ்வளவு அலட்சியம் காட்டியிருக்கிறது என்பதைப் பின்வரும் பட்டியல் எடுத்துக்காட்டுகிறது:

| எண் | பரிந்துரைகள் | முதல் ஆணையம் | இரண்டாம் ஆணையம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மொத்த பரிந்துரைகள் | 75 | 77 | 152 |
| 2 | 1) ஏற்கப்பட்டவையும் ஆணை பிறப்பிக்கப்பட்டவையும் | 5 | 3 | 8 |
| | 2) ஊரக வளர்ச்சித் துறை வெளியிட வேண்டிய தொடர் ஆணைகள் | - | 10 | 10 |
| 3 | கொள்கை அடிப்படையில் ஏற்கப்பட்டு இன்னும் ஆணை பிறப்பிக்கப்படாதவை | 14 | 12 | 26 |
| 4 | ஏற்கப்படாதவை | 31 | 5 | 36 |
| 5 | நடவடிக்கை எடுக்கப்படாதவை | 25 | 47 | 72 |

இந்தப் பட்டியல் “ஏற்கப்படாத பரிந்துரைகள்”, “நடவடிக்கை எடுக்கப்படாதவை”, “கொள்கை அடிப்படையில் ஏற்கப்பட்டு இன்னும் ஆணை பிறப்பிக்கப்படாதவை” ஆகியவை மொத்த பரிந்துரைகளில் 88 சதவீதம் அளவுக்கு இருப்பதைக் காட்டுகிறது. தனது பரிந்துரைகள் பெரிய மாற்றங்களின்றி ஏற்கப்படும் என்ற மாநில நிதி ஆணையத்தின் எதிர்பார்ப்பு ஏமாற்றத்தையே சந்தித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் மட்டுமல்லாது, பல ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கூட ஆணையம் வழங்கியிருக்கிறது. அந்த ஆலோசனைகள் அடிப்படையில் தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

நிதி அதிகாரங்களைப் பரவலாக்குவது என்பதைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் பரிதாபகரமான நிலைமைதான். மொத்த ஆண்டு வருவாய் செலவினத்தில் 8 சதவீதத்தை உள்ளாட்சிகளின் பொறுப்பாக்க வேண்டும் என்று முதல் நிதி ஆணையம் பரிந்துரைத்தது. ஐந்தாம் ஆண்டில் அது 12 சதவீதத்தை அடையும் வகையில் ஆண்டுக்கு 1 சதவீதம் அளவுக்கு அதை அதிகரித்து வரவேண்டும் என்று ஆணையம் கூறியுள்ளது. இது நடைபெறவே இல்லை. இரண்டாவது நிதி ஆணையம் 9 சதவீதம் ஒதுக்க வேண்டும் என்றும் அது ஐந்தாவது ஆண்டில் 16 சதவீதத்தை எட்ட வேண்டும் என்றும் கூறியது. இதுவும் நடக்கவில்லை. மூன்றாவது ஆணையம் அதே 8 சதவீதத்தைப் பரிந்துரைத்து, அது ஐந்தாவது ஆண்டில் 10 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்றது!

மேலும் கவலைதரக்கூடிய அம்சம் என்னவென்றால், தமிழகத்தில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தின் சராசரி செலவுகள் வருவாயை விட அதிகரித்த வண்ணம் உள்ளன, அதனால் தமிழகப் பஞ்சாயத்துகள் பெரும் கடன் சுமைக்கு உள்ளாகியுள்ளன. 1996-97’ல் ஒரு பஞ்சாயத்துக்கு சராசரியாகக் கிடைத்த வருவாய் 1 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய். செலவு சராசரியாக 1 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய். ஆனால் 1999-2000’ல் மொத்த வருவாய் 3 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய், செலவோ 3 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய். வருவாயை விட செலவு அதிகம். தற்போது சராசரி வருவாய் 6 லட்சம் என்றும் செலவு அதைவிட மிக அதிகம் என்றும் சொல்லப்படுகிறது.

ஒரு பஞ்சாயத்தின் மின்சார கட்டண செலவு மொத்த வருவாயில் 50 முதல் 60 சதவீதம் வரை ஆகிறது. பல ஆண்டுகளாக, பஞ்சாயத்துகளுக்கு யூனிட்டுக்கு ரூ.1 முதல் ரூ.1.60 வரையில்தான் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2005’ல் அது யூனிட்டுக்கு ரூ.3.40 ஆக அதிகரிக்கப்பட்டது. 2007’ல் அதில் 40 காசு மட்டுமே குறைக்கப்பட்டு, ரூ.3 ஆக்கப்பட்டது. இங்கே கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால், பஞ்சாயத்துகள் வர்த்தக நிறுவனங்கள் அல்ல. மாறாக அவை சமுதாய அமைப்புகளாக, கிராமத்தின் பொது நலனுக்காக செயல்படுகின்றன உள்ளூர் அரசாங்க அமைப்புகளாகும். இக்காரணத்தினால்தான் ஆந்திராவில் பஞ்சாயத்துகளுக்கான மின் கட்டணம் யூனிட்டுக்கு ரூ.1.56 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கேரளத்திலோ ரூ.1 கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

## 3. அதிகாரப் பரவலுக்கு எதிரான உலகமயமாக்கல்

மக்கள் தங்களது தற்சார்பு நிலைக்கேற்ப வளர்ச்சியைத் திட்டமிடவும், நாசகரமான வளர்ச்சியைத் தடுக்கவும் அவர்களை அணிதிரட்டுகிற சக்தி வாய்ந்த வேர் மட்ட அமைப்புதான் கிராம சபை. பல சந்தர்ப்பங்களில் தமிழகத்தின் சிற்றூராட்சி மன்றங்கள், கிராம சபைக் கூட்டங்களோடு சேர்ந்து பல பாதகமான பெரும் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன; சுற்றுச் சூழலைச் சீர்குலைக்கக்கூடிய தொழிற்சாலைகள் கட்டுவதற்கு “மறுப்பு இல்லை” சான்றிதழ் வழங்க மறுத்துள்ளன. உலக மூலதனம் முன்பு ஊடுருவாத சந்தைகளுக்குள் நுழைந்து விரிவுபடுத்தப்பட்டிருப்பது, நகர்ப் புற ஏழைகள், கிராமப்புற ஏழைகள், உழைக்கும் வர்க்கத்தினர் ஆகியோர் தொடர்ச்சியாக எதிர்த்துவந்துள்ள போதிலும், அவர்களது வாழ்க்கையையும் வாழ்வாதாரங்களையும் நிதியாதாரங்களையும் மோசமாக பாதித்துள்ளது. இது பொதுமக்களுக்கான அரசுக் கொள்கைகளிலும், அரசுச் சட்டங்களிலும், பட்ஜெட் ஒதுக்கீடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தி மக்கள் நல ஆட்சி, உறுதியான வளர்ச்சி என்பதற்கெல்லாம் குழிபறித்திருக்கிறது; முற்றிலும் நுகர்பொருள்களின் உற்பத்தி சார்ந்த ஒரு கலாச்சாரத்தை வளர்த்துவிட்டிருக்கிறது.

உலகமயமாக்கலின் ஒரு பகுதியாக ஏற்படுத்தப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் கிராமங்களை அழித்து வருகின்றன. மக்களுக்கு அவை எந்த விதத்திலும் நன்மையளிக்கவில்லை. மாறாக அவர்களது நிலங்களும் வாழ்வாதாரங்களும் தான் பறிபோகின்றன. அவர்கள் கட்டாயமாக வெளியேற்றப்படுவதுதான் நடக்கிறது. உலகச் சந்தையையும் தொழிலாளர் உழைப்பையும் வளங்களையும் உலகப் பகாசுரர்கள் (பன்னாட்டு நிறுவனங்கள்) கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுதான் உலகமயமாக்கல் என்பதாகும். இது ஏகாதிபத்தியம் என்பதன் தற்போதைய வடிவமேயாகும். உலகத்தின் மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் ஏழை நாடுகளில் மிச்ச மீதி இருப்பதையும் தங்களது கட்டுப்பாட்டிலும் ஆதிக்கத்திலும் மறுபடியும் கொண்டுவருவதற்கான முயற்சிதான் நவீன தாராளமய பொருளாதாரம் என்ற பெயரால் நடக்கிறது. அந்த நாடுகளின் உழைப்பையும் சந்தைகளையும் சுரண்டுகிற முயற்சியே இது. சூப்பர் சுரண்டல் அடிப்படையிலான பொருளாதாரம், ஆக்கிரமிப்புகளின் மூலம் குவிக்கப்படும் செல்வம், காயடிக்கப்படும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரம் என்ற அடிப்படையிலான இந்தச் சந்தை ஏழைகளும் இதர உழைக்கும் வர்க்கத்தினரும் மிக நீண்ட போராட்டங்களை நடத்தியாக வேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது. முதலாளித்துவ நிறுவனங்களின் உலக அரசாங்கம் போன்ற அமைப்பு, கீழேயிருந்து வரக்கூடிய இயக்கத்திற்கு அல்லது கிராம சபைகளும் கிராமப் பஞ்சாயத்து மன்றங்களும் முடிவெடுக்கிற அதிகாரத்துக்கு நேர் எதிரானதாகும். அதிகாரப் பரவலைப் பாதுகாக்க, இன்றைய முதலாளித்துவ மூலதனக் குவிப்புக்கு எதிராகவும் மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்படுவதற்கு எதிராகவும் நடைபெறும் போராட்டங்கள் அவசியமாகும்.

உலக வர்த்த அமைப்பு (உட்டோ) ஒரு பேச்சுவார்த்தைக்கான அமைப்பு, அது ஒரு ஜனநாயக அமைப்பு, ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு ஓட்டு என்ற வாய்ப்புள்ள அமைப்பு என்று நம்புகிறவர்களுக்கு ஒரு வார்த்தை - அதெல்லாம் வெறும் கட்டுக்கதைதான். உட்டோ அமைப்பில் எந்தவொரு முடிவும் வாக்கெடுப்பு அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. வர்த்தகம் தொடர்பான சமத்துவ வாய்ப்புகள் குறித்து அதிலே நீங்கள் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. கருத்தொற்றுமை என்ற அடிப்படையிலேயே முடிவுகள் எடுககப்படுகின்றன. அந்தக் கருத்தொற்றுமை என்பது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கும், இநதியா, சீனா, தென் கொரியா, கனடா, அர்ஜன்டைனா, வெனிசுலா, பிரேசில், ஆஸ்திரேலியா போன்ற வேகமாக வளரும் நாடுகளுக்கும் இடையே ஏற்படுவதாகும். இவ்வாறு எவ்வளவுக்கெவ்வளவு உலக மூலதனம் ஊடுருவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது, அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் கிராம சபைகளிலிருந்தும் அதே போன்ற கருத்தொற்றுமையையும் ஒப்புதலையும் எடுத்துக்கொள்கிறது. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட உள்ளாட்சி அரசாங்கம் என்பதற்கு இது மிகப்பெரிய அச்சுறுத்தலாகிறது.

இந்திய அரசு பொருள் தயாரிப்பு, சேவை ஆகியவற்றில் ஏகபோக நிறுவனங்களின் நலன்களையும் நிதி மூலதனவாதிகளின் நலன்களையுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு, அதன் வரிக் கொள்கையாகும். உலகிலேயே ஆடம்பர வாழ்க்கைக்கு மிகமிகக் குறைவாக வரி விதிக்கப்படும் நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும். இது பட்ஜெட்டுகளுக்கான வருவாய் அதிகரிக்கப்படுவதைக் கடினமாக்குகிறது. பெரும்பாலான பொருட்களுக்கு ஒரே விதமான விலைதான் - அவற்றை பணக்காரர்கள் வாங்கினாலும் சரி, ஏழைகள் வாங்கினாலும் சரி. பெரிய அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் உலகமயமாக்கலின் தாக்குதல்களிலிருந்து மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற வாக்குறுதிகள் எதுவும் இல்லை. விவசாயம், நீர்ப்பாசன வசதிகள் போன்றவற்றை மீட்டமைப்பதற்கான திட்டங்களும்

இல்லை. இதையொட்டியே, தமிழக அரசின் பட்ஜெட்டில் பஞ்சாயத்துகளுக்கான ஒதுக்கீடு தேக்க நிலையிலேயே இருக்கிறது; வருவாய் செலவினத்தில் 10 சதவீதத்தை ஒதுக்குவதற்கான ஏற்பாடுகள் கூட இல்லை.

மேலும், இந்தியாவில் தனியார் நிறுவனங்களின் செல்வாக்கு என்பது ஒன்றும் தனிப்பட்ட விவகாரம் அல்ல. பகாசுர தனியார் நிறுவனங்களுக்குப் பாய்ச்சப்படுகிற பொது நிதியாரங்களுக்கு அணை போடப்படுமானால், பல நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டுவிடும். அந்த நிறுவனங்கள் யாவும் மக்களின் பணத்தைப் பயன்படுத்தியே கொழுத்து வளர்ந்திருக்கின்றன. பொதுமக்களுக்கான நிதி அமைப்புகளிலிருந்து கடன் வசதிகள், காப்பீட்டு வசதிகள், மான்ய கட்டணத்தில் மின்சாரம், ஆறு வழிச் சாலைகள், தாராளமான தண்ணீர், பொது இடங்களில் கழிவுகளைக் கொட்ட வசதி, வரிச் சலுகைகள்... இவை போல் இன்னும் பல வசதிகள் தனியார் நிறுவனங்களுக்கு முன்னெப்போதும் இப்படி இருந்ததில்லை என்கிற அளவுக்கு அள்ளித் தரப்படுகின்றன. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட அமைப்புகளாகக் கூறப்படும் ஊராட்சி ஒன்றியங்களும் சிற்றூராட்சிகளும் இந்தப் பெரும் பகாசுரத் தனியார் நிறுவனங்களின் சேவகர்களாக, தங்களது அதிகாரங்களை மீறி அந்த நிறுவனங்களுக்கு சாதகமான தீர்மானங்களை நிறைவேற்றும் சபைகளாகவே மாற்றப்பட்டுள்ளன.

உணவுப் பாதுகாப்பு என்பது, சுருங்கிக்கொண்டே போகிற பொது விநியோக ஏற்பாடு மட்டுமேயல்ல; அதற்கும் அப்பால் பலவாறாக உள்ளதாகும். கிராம சபைகளைச் சேர்ந்த பெரும்பாலானோர் உயிர்வாழ்வதே முறைசாரா சந்தை முறைகளால்தான். நம் நாட்டில் இப்போதும் ஒரு முறைசாரா சந்தை முறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதனை முறைப்படியான சந்தை ஏற்பாடுகளும் அரசின் சட்டங்களும் கொள்கைகளும் தொடர்ந்து சீர்குலைத்துவருகின்றன. பொருள் உற்பத்தியில் ஈடுபடும் சிறு தொழில்களும், விநியோகத்தில் ஈடுபடும் ஒரு பெரும் வணிகர் பட்டாளமும் முறைசாரா சந்தையில் இப்போதும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். செருப்பு வாங்குவதற்கு நாம் பாட்டா அல்லது நைக் கடைகளுக்குத்தான் செல்ல வேண்டும் என்பதில்லை; தண்ணீர் வாங்குவதற்கு கோகோ கோலா அல்லது பெப்சியைத்தான் நாட வேண்டும் என்பதில்லை. பிராண்டு முத்திரையுள்ள ஆடைகளைத்தான் நாம் வாங்கியாக வேண்டும் என்பதில்லை. நமக்கு உள்ளூர் தயாரிப்புகள் இருக்கத்தான் செய்கின்றன. ஏழைகள் மலிவான விலையில் உணவு பெறுவதற்கு வழிகள் இருக்கவே செய்கின்றன. மெக் டொனால்டு கடைகளில்தான் சாப்பிட வேண்டும், ரிலையன்ஸ் அல்லது ஸ்பென்சர் வளாகங்களில்தான் உணவு தானியங்கள் வாங்கியாக வேண்டும் என்றிருந்தால் நாம் அழிய வேண்டியதுதான். ஆனால் இப்போது, பாரம்பரிய உணவுகளின் இடத்தை ஏற்றுமதி உணவுகள் பிடித்து வருகின்றன. நாம் நமது முறைசாரா சந்தை முறையை வலுப்படுத்தியாக வேண்டும், நமது பாரம்பரிய உணவுச் சங்கிலி ஏற்பாட்டைப் பாதுகாத்திட வேண்டும். தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளின் கார்களைப் பாதுகாப்பதற்காக இங்கே உயிரி-எரிபொருள் தாவரங்கள் வளர்க்கப்படுவதையும், உணவுக்குப் பாதுகாப்பு இல்லாமல் நாம் பட்டினி கிடந்து சாக நேரிடுவதையும், நம் சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தமாகத் தற்கொலை செய்துகொள்ளுமாறு தள்ளப்படுவதையும் ஏற்க முடியாது என்று நாம் சொல்லியாக வேண்டும். நகரம், கிராமம் இரண்டிலுமே மிகப் பெரும்பாலானவர்களாக உள்ள ஏழை மக்கள் உணவுப்பொருள்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் இந்த முறைசாரா சந்தை அமைப்பைத்தான் சார்ந்திருக்கிறார்கள்.

பாடுபடும் மக்களின் குரல் கேட்கப்பட வேண்டுமானால் அவர்களது பங்கேற்புக்கான அரசாங்க முறை தேவை. தற்போதைய உலகமயமாக்கல் சூழலில் தாக்குப்பிடித்து வாழ்வதே அவர்களுக்குப் பெரும்பாடாக இருக்கிறது. ஆகவேதான் கிராம சபைகளையும் அதிகாரப் பரவலையும் பஞ்சாயத்து அரசாங்கத்தையும் வலுப்படுத்துவது முக்கியத் தேவையாகிறது. பொதுவாக, உலகமயமாக்கல் என்றாலே சந்தைகள்தான்; இதில் முடிவுகள் எடுக்கப்படுவதும், கொள்கைகள் வகுக்கப்படுவதும், சட்டங்கள் தீட்டப்படுவதும் அதிகாரக் குவிப்பின் மூலமாகவே நடைபெறுகிறது. உலகமயமாக்கல் சூழலில், இந்திய மாநிலங்களுக்கிடையேதான் அதிகாரக் குவிப்பு நடைபெறுகிறது என்பதல்ல; மாறாக உலக அளவிலேயே கூட அதிகாரக் குவிப்பு என்பது நடைபெறுகிறது. உலகளாவிய மூலதனம், பங்குச் சந்தைகள் ஆகியவை கொழுக்க வேண்டுமானால் முடிவுகள் எடுப்பது மையப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்; சொல்லப்போனால், அதிகாரம் வேறு எங்கோ பரவலாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இந்த மாயமான தன்னாட்சியையும் அரை-நிலப்பிரபுத்துவத்தையும் உடைப்பது அவசியமாகும்.

ஆக, மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்படாமல் இருப்பது, அதிகாரங்கள் பரவலாக்கப்படுவது என்ற கோட்பாட்டிற்கே எதிரானதுதான் உலகமயமாக்கல். அதிகாரப் பரவல் என்பது உண்மையிலேயே நிலைத்திருக்க வேண்டுமானால் அதிகாரமும் செல்வமும் ஒரே இடத்தில் குவிக்கப்படுவது நின்றாக வேண்டும்; நிதியாதாரங்கள் சமமாகப் பிரித்தளிக்கப்பட வேண்டும். இதற்கு நேர்மாறாக, உலகமயமாக்கலுக்கு செல்வமும் அதிகாரமும் ஒரே இடத்தில்

குவிக்கப்பட்டாக வேண்டும்; முதலாளித்துவ சொத்துக்குவிப்பு, நிதியாதாரங்கள் ஆகியவை மையப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

உலகமயமாக்கலால் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய ஒரு அமைப்பு உள்ளாட்சி அரசாங்கம்தான். உள்ளாட்சிகளுக்கு மேலும் அதிகமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கோரிக்கை. ஆனால், அரசு அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீடுகளும் நிதி மான்யங்களும் வெட்டப்பட வேண்டும், உலக மூலதனச் சந்தைகள் உள்ளாட்சி அமைப்புகளின் குறுக்கீடுகள் இல்லாமல் செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும், அதற்கு அரசு ஆதரவாக இருக்க வேண்டும் என்பது உலக வர்த்தக அமைப்பு (உட்டோ) மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கோரிக்கை. பல நாடுகள் இதை எதிர்க்கின்றன, அதிலிருந்து நாம் பாடம் கற்றாக வேண்டும். தொழில் வளர்ச்சி அடைந்த சில நாடுகளிலேயே கூட, “இது உட்டோ பிடியில் சிக்காத நகராட்சி”, “இது உட்டோ இல்லாத வட்டாரம்” என்றெல்லாம் அறிவித்துள்ள நகராட்சிகள் இருக்கின்றன. அத்தகைய நகராட்சிகளுக்குள், உட்டோ உடன்பாடுகளின் கீழ் தயாராகும் எந்தப் பொருளும் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994-ன் 159, 160 ஆகிய பிரிவுகள் உள்ளாட்சிகள் தமது பகுதியில் தொழிற்சாலைகள் கட்டப்படுவதற்கு “மறுப்பு இல்லை” என்று சான்று வழங்கவும் அல்லது வழங்காமலிருக்கவும்தான் அதிகாரம் அளிக்கின்றன. இந்த அதிகாரம் கூட தங்களது சுதந்திரமான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் என்று பன்னாட்டு நிறுவனங்கள் கருதுகின்றன. இந்த அதிகாரத்தை உள்ளாட்சிகளிடமிருந்து கைப்பற்றி ஒரு அமைச்சரிடமோ அல்லது ஒரு அரசுத் துறை அதிகாரியிடமோ ஒப்படைப்பதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

பங்கேற்பு அரசாங்கம், உறுதியான வளர்ச்சி, தற்சார்பு ஆகியவற்றுக்கான மக்கள் இயக்கமாக கிராம சபைகள் மாற வேண்டும். அதை நிலைநாட்ட வேண்டுமானால், உள்ளாட்சி அமைப்புகள் சமத்துவமின்மைகளுக்கும் சாதிப் பாகுபாடுகளுக்கும் பாலினப் பாகுபாடுகளுக்கும் மனித உரிமைகள் மீறப்படுவதற்கும் எதிராகப் போராடுகிற இடங்களாகத் திகழவேண்டும். தமிழ் நாட்டு உள்ளாட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் இதர இயக்கங்களோ தங்களை இணைத்துக்கொள்கிற ஒரு நிலைக்கு முன்னேற வேண்டும்; பெண்கள், தலித்துகள், பழங்குடியினர், உழைக்கும் வர்க்கத்தினர் ஆகியோரின் இயக்கங்களோடு தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும். மாற்றத்துக்கான அவர்கள் எழுப்பும் குரல்களுக்கு குறிப்பாக ஆதரவளிக்க வேண்டும். இந்த இணைப்பு இன்னும் போதிய அளவுக்கு உருவாக்கப்படவில்லை. இந்த இணைப்பு மிக முக்கியமானதாகும். ஊராட்சி அரசாங்கங்களோடும் கிராம சபைகளோடும் போதிய அளவுக்கு, திட்டமிட்ட முறையில் நாம் இணைந்து செயல்படுவோமானால், மாநில அரசுகள் மேலும் சுயேச்சையாக, நம்பகமாக, வெளிப்படையாக இயங்கச் செய்வோமானால், உலகமயமாக்கலுக்கு எதிராகக் கீழேயிருந்து போராடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அமையும். மக்களின் உயர் தன்னாளுமையையும், வளங்களையும் மையத்தில் அதிகாரங்களைக் குவித்துக்கொண்ட ஒரு அரசு விலைக்கு விற்றாலும் கூட அந்த வாய்ப்பு அமையும்.

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

## கழிவறை வசதியில்லையா ? உதவி கிடையாது

**புனே, நவ. 13–**

அரசின் நிர்மல் கிராம் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்தும் வகையில், இதுவரை இல்லாதபடி, வீடுகளில் கழிவறை இல்லாத கிராமவாசிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ், கடன் உள்ளிட்ட பிற பயன்கள் வழங்கப்படாது என்று புனே மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.

புனே மாவட்டத்தில் 870 கிராமங்கள், முறைப்படி கழிவறை வசதி இல்லாதவைகளாக உள்ளன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு கழிவறை கட்டாயம் என்ற அடிப்படையில், நிர்மல் கிராம் (சுத்தமான கிராமம்) என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதை தீவிரமாக அமல்படுத்தும் வகையில், இந்த உத்தரவை புனே கலெக்டர் சந்திர காந்த் டால்வி அறிவித்துள்ளார். புனே கலெக்டர் சந்திரகாந்த் தலைமையில், மாவட்ட அதிகாரிகள், ஜில்லா பரிஷத் நிர்வாகிகள் மற்றும் போலீஸ் அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில், குடும்பத்துக்கு ஒரு கழிவறை அமைக்காதவர்களுக்கு, இனி நில உரிமை பத்திரங்களை வருவாய்த் துறை வழங்காது என்று முடிவு எடுக்கப்பட்டது.

**தினமலர், 13.11.2008**

# உள்ளாட்சி ஜனநாயகத்தின் அடித்தளம் கிராமசபை

– என். குணசேகரன், மாநிலக்குழு உறுப்பினர், CPI (M)

இந்திய அரசியில் சாசனச் சட்டத்தின் 73வது சட்டதிருத்தம், உள்ளாட்சி மன்றங்களுக்கு, உள்ளூர் மட்டத்திலான ஆட்சி, நிர்வாகப் பொறுப்புக்களை வழங்குகிறது. ஆனால், இன்று வரையுள்ள அனுபவங்களை, தற்போது தொகுத்துப் பார்க்கிறபோது, உள்ளாட்சி மன்றச் செயல்பாடு இன்னமும் சரியான வழித்தடத்தில் செல்லவில்லை என்றுதான் தோன்றுகிறது. அது, கடந்த பதினைந்து ஆண்டுகளிலும் இலக்கு தவறிய பயணமாகவே இருந்துள்ளது. மத்திய அரசு, 1997–ம் ஆண்டிலும், பிறகு பத்தாண்டுகள் கழித்து, – 2007ம் ஆண்டிலும் வெளியிட்ட ஆய்வு விவரங்களே, இந்த உண்மையை வெளிப்படுத்துகின்றன. மக்களுக்கான அதிகாரம் என்பது கானல் நீராகிவிடுமோ என்று 2007–ம் ஆண்டு ஆய்வு கவலை தெரிவிக்கிறது.

இதற்கான காரணம் என்ன? "அதிகாரப் பரவல்" என்று தீவிரமாகப் பேசப்பட்டாலும், நடைமுறையில் உண்மையான, மக்களுக்கு உரிமையும், அதிகாரமும் நிலைத்திருக்கிற அதிகாரப்பரவல் இன்னுமும் முழுமை பெறவில்லை. மேல் மட்டத்தில் இருக்கின்ற மத்திய, மாநில, அரசுகளின் சொல்படி தலையசைத்து, செயல்படும் ஒரு ஏஜெண்ட் தான் உள்ளாட்சிமன்ற அமைப்பு என்கிற நிலை இன்றைக்கும் நீடிக்கிறது. இத்தகு பின்னணியில் தான் கிராம சபை அமைப்பின் செயல்பாட்டையும் ஆராய வேண்டியுள்ளது.

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தின் 73வது திருத்தத்தின் 243–A பிரிவும், தமிழ் நாடு ஊராட்சி சட்டமும் கிராம சபையின் செயல்பாடுகளை வரையறுக்கின்றன. இந்த சட்டங்களே சுயாட்சிக்கான மக்கள் வேட்கையின் விளைவாக உருவானவை. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உருவான விடுதலைப் போராட்டம், சுயாட்சிக் கோட்பாடுக்கு உரமூட்டியது.

இதனால்தான், விடுதலைக்குப் பிறகு வந்த தலைமுறை, கிராம ராஜ்யத்தின் மேன்மையை வலியுறுத்தியது. மனிதநேயத்துடன் கூடிய மக்கள் நல்வாழ்விற்கு கிராம சுயாட்சி தேவை என்று காந்தியவாதிகளான ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்றோர் வலியுறுத்தினர். மறுபுறம், மக்களுக்கு அதிகாரம் வழங்குவது, பொதுவுடைமை இலட்சியம் காண சிறந்த வழி என்ற நோக்கில், இ. எம். எஸ் நம்பூதிரிபாடு போன்றவர்கள் கிராம சுயாட்சியை வலியுறுத்தினர். எனவே, மாறுபட்ட அரசியல் பார்வைகள் இருந்த போதிலும், அடிமட்டத்திலான அதிகாரப்பரவல் என்பதை அனைவரும் ஏற்றனர். இதன் விளைவாகவே, கிராம சுயாட்சி என்பதும், உள்ளாட்சி மன்ற அதிகாரங்களும் சட்டத்தில் இடம் பெற்றன. அதிகாரங்கள் மேல் மட்டத்தில் குவிந்து கிடக்க வேண்டும் என்று விரும்புகின்ற சக்திகள் இன்னமும் பலமாக ஆட்சி பீடங்களில் நிலைத்து நிற்கின்றன. அதனால் தான் சட்டங்கள் அதிகாரப் பரவலுக்கு துணைநின்றாலும், நடைமுறையில் அவை, செல்லாக்காசாக மாற்றப்படுகின்றன.

தமிழ்நாட்டில் கிராமசபைக் கூட்டங்கள் ஆண்டிற்கு நான்கு முறை கூட்டப்படுகின்றன. இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் கிராம சபைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிகள், அதிகாரங்கள், பொறுப்புக்களை எல்லாம், முறையாக நிறைவேற்றிட, இந்த நான்கு கூட்டங்கள் மட்டும் போதுமா?

ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, மாவட்ட வருவாய் வளர்ச்சி முகமை (DRDA) ஆகிய அமைப்புக்கள் மேற்கொண்டுள்ள திட்டங்களையும், மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களையும் ஊராட்சியில் அமலாக்குவதற்கு கிராமசபை அங்கீகாரம் வழங்கிட வேண்டும். இதற்கு, ஆண்டில் நான்கு முறை கிராம சபை கூடினால் போதுமா? சமூகத்தணிக்கை, திட்டப் பயனாளிகள் தேர்வு, கிராமத்திற்குத் தேவையான திட்டங்களை உருவாக்குவது, கிராமத்தின் வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், நீராதாரம், பிற பல்வகை அம்சங்களில் கிராம சபையின் அர்த்தமுள்ள பங்களிப்புக்கு நான்கு முறை கூடினால் போதுமா? நிச்சயமாக, கிராம சபை உறுப்பினர்களாகிய வாக்காளப் பெருமக்கள் நான்கு முறை மட்டும் கூடினால் மேற்கண்ட பணிகளுக்கு மேலோட்டமான அங்கீகாரத்தை வழங்குவதுதான்

சாத்தியமாகும். இதனால், கிராமசபை எனும் அமைப்பு அர்த்தமற்றதாகிவிடுகிறது. எனவே, தேவைக்கேற்ப பன்முறை கிராமசபைக் கூட்டங்கள் நடைபெற வேண்டும்.

இவ்வாறு கூறுகிறபோது, அதிகாரிகள் மற்றும் அரசுத் தரப்பில் எதிர்ப்பு வருகிறது. 'நான்கு முறை கூடுவதற்கே, மக்கள் வருகை குறைவாக இருக்கிறது' என்ற பதில் தயாராக நம்மீது வீசப்படுகிறது. ஊராட்சித் தலைவர்களிடமிருந்து, 'ஒரு முறை கூட்டம் நடத்திட, அனுமதிக்கப்பட்ட ரூ**500**க்கு மேல் செலவாகிறது; பல முறை நடத்தினால், செலவுக்கு எங்கு செல்வது **?**' என்ற கேள்வி எழுகிறது.

கிராமசபை எனும் அமைப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அரசுத் தரப்பில் சொல்லப்படுகிற கூற்று, உண்மையானது என்றால், ஏன் இதற்காக அதிக செலவு செய்திடக் கூடாது **?** கிராமசபைக் கூட்டங்களுக்காகவும், அந்த கூட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரத்திற்காகவும் ஏன் கூடுதலாக அரசு நிதி ஒதுக்கக்கூடாது **?** பல முறை, தேவைக்கேற்ப, கூட்டம் நடத்துவதற்கு நிதி ஒரு தடை எனில் அரசு அதனைத் தீர்க்க முன் வர வேண்டும்.

“மக்கள் கிராமசபைக் கூட்டங்களில் பங்கேற்பதில் ஆர்வம் காட்டுவதில்லை" என்ற கருத்து மிகவும் பரவலாகப் பேசப்படுகிறது. கிராமசபை கூட்டங்களில், கிராம சபையின் உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த வாக்காளர்களில் பத்து சதம் குறைவெண் வரம்பு இருந்தது. தற்போது தமிழக அரசு மொத்த மக்கள் தொகையில் பத்து சதம் இருந்தால் போதுமானது என்ற வகையில் மாற்றம் செய்துள்ளது.

மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்று கூறுவது மக்கள் மீது பழி போடக்கூடிய ஒரு முயற்சி, உண்மையாக, தற்போது நடந்துள்ள கிராமசபைக் கூட்டங்களை ஆய்வு செய்தால், மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்பது மாநிலந்தழுவிய நிலைமை இல்லை என்பது தெரிய வரும். அப்படியே மக்கள் வருகை குறைவாக இருப்பினும், அதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும். ஏனெனில் தங்கள் வாழ்வுச்சூழல், நிலைமைகள் குறித்துப் பேசப்படும் ஒரு அமைப்பில் மக்களே அக்கறையற்று இருப்பார்கள் என்பது ஏற்புடைய வாதம் அல்ல.

தற்போது நடைபெறும் கிராம சபைக் கூட்டங்கள் இயந்திர கதியில், சட்டத்தை திருப்திப்படுத்திட வேண்டுமென்ற நோக்கில் நடத்தப்படுவதுதான் முக்கிய காரணம். உயிரோட்டமாகவும், அக்கறையோடும் கூட்டங்கள் நடத்தப்பட்டால் மக்களின் ஈடுபாடும், பங்கேற்பும் அதிகரிக்கும்.

கிராமசபை, முறையான சமூகத் தணிக்கைக்கான தளம் என்ற விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். திட்ட ஆய்வுகள், வரவு செலவு, முந்தைய கூட்ட தீர்மான அமலாக்கம் போன்ற அனைத்து அம்சங்களிலும் மக்களுக்கு அதிகாரமும், உரிமையும் உண்டு என்பது அழுத்தமாக மக்களுக்கு விளக்கப்பட வேண்டும்.

மக்களிடையே எழும் கருத்துக்கள், கேள்விகள், சந்தேகங்கள் ஆகிய அனைத்தையும் விவாதிக்கிற சூழல் தற்போது கிராமசபைக் கூட்டங்களில் இல்லை. பொருத்தமான நேரம், பொருத்தமான இடம் தேர்ந்தெடுப்பதிலும் பல குறைபாடுகள் உண்டு.

கிராம சபைக் கூட்டங்களில் மக்கள் தங்களது தேவைகள் குறித்து கருத்துக்களை எடுத்துரைப்பதுண்டு. அவ்வாறு அவர்கள் எழுப்பிய பிரச்சனைகள் குறித்த மேல்நடவடிக்கைகள் பற்றி அடுத்த கூட்டத்தில் விளக்கம் அளிக்காத போக்கும் உள்ளது. கேரள ஊராட்சி சட்டம், கிராமசபை உருவாக்கும் திட்டங்கள், மற்றும் தீர்மானங்களுக்கு கிராம ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி மற்றும் அரசு அமைப்புக்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது. அவ்வாறு அவை அமலாக்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்களை கிராமசபைக் கூட்டத்தில் முறையாகத் தெரிவிக்கவும் அந்தச் சட்டம் கட்டாயப்படுத்துகிறது.

தற்போது நடைபெறும் கிராமசபைக் கூட்டங்களுக்கான கூட்டப்பொருள் பெரும்பாலும் மேலே இருந்து தீர்மானிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தொலைநகல் மூலம் கூட்டப்பொருள் குறித்த தகவல் ஊராட்சி தலைவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இதுபோன்ற நடைமுறைகள், ஊராட்சிக்கு உள்ளிட்ட கிராம மக்களின் தேவைகளைப் பிரதிபலிப்பதாக இல்லை. கிராமசபையின் அடிப்படையே உள்ளூர் மட்டத்தினாலான திட்டங்களை மக்களே கூடி உருவாக்குவதுதான். ஆக, இன்னமும் மக்கள் பங்கேற்பாளர்களாக இல்லாமல் பார்வையாளர்களாக இருக்க வைக்கும் பல நடைமுறைகள் நீடிப்பதால்,

கிராமசபை தற்போது அர்த்தமிழந்து காணப்டுகிறது.

அதே போன்று கூட்டங்களில் மக்கள் வசதியாக பங்கேற்றிடவும், விவாதிக்கவும் வார்டு அளவிலான சபைக் கூட்டங்களும் நடைபெற வேண்டும்.

தொடர்ந்து நீடிக்கும் குறைபாடுகளைக் களைந்திட, அரசு உரிய சட்டங்கள், விதிகளை உருவாக்கிட வேண்டும். இதற்கென இதர மாநில அனுபவங்களையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, 1997–ம் ஆண்டில் கேரளத்தில் 20 லட்சம் மக்கள் ஒரே சமயத்தில் பங்கேற்ற கிராமசபைக் கூட்டங்கள் நடைபெற்றன. இந்த வெற்றிக்குப் பின்னால் அவர்களது பரந்த அளவிலான விழிப்புணர்வுப் பிரச்சாரம், தயாரிப்புப் பணிகள் இருந்தன. கிராமந்தோறும் விழிப்புணர்வுக் கலைப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. கிராமங்களில் செயல்படும் பல்வேறு அமைப்புக்களை விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபடுத்தினார்கள். இது போன்ற பல தயாரிப்புப் பணிகள் அவசியம்.

இன்றைய நிலையில் மக்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள ஜனநாயக உரிமையான கிராம சபை எனும் அமைப்பை வலுப்படுத்திட வேண்டும். உலகமயம் எனும் பெயரில் அமலாக்கப்படும் கொள்கைகள் மக்களின் உண்மையான தேவைகளைப் புறக்கணிக்கின்றன. மேலிருந்து, ஒரு சில பெரிய நிறுவனங்கள் இலாபரீதியில் பலன் பெறச் செய்திடும் திட்டங்கள் கிராமங்களிலும், நகரங்களிலும் திணிக்கப்படுகின்றன. இதனை நிகழ்த்திட மிகவேகமாக மக்கள் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. மக்கள் வாழ்விழந்து கிராமங்களிலிருந்து வெளியேறும் நிலை பரவி வருகின்றது. இந்நிலையில் தற்போதுள்ள உரிமைகள் அதிகாரங்கள், ஜனநாயக அமைப்புக்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மத்திய, மாநில அரசுகளைத் தேர்ந்தெடுக்க மக்கள் வாக்களிக்கின்றனர். மக்கள் வாக்களித்த பிறகு இந்த அரசுகளின் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க வகையில் மக்கள் தலையிட நமது ஜனநாயகத்தில் அதிக வாய்ப்புக்கள் இல்லை. ஆனால் உள்ளாட்சி ஜனநாயகத்தில் மக்கள் தொடர்ந்து தலையிடுவதற்கும், கண்காணிப்பதற்கும், தங்கள் தேவைகளுக்கான திட்டங்களை உருவாக்குவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. தற்போது கிடைக்கின்ற இந்த ஜனநாயகத்தை மக்கள் விழிப்புடன் பயன்படுத்தினால் மேலும் அதனை வளர்த்தெடுத்து, உழைக்கும் மக்களுக்கு முழு அதிகாரமும், முழு ஜனநாயகமும் கிடைத்திடும் நிலையை உருவாக்கிடலாம். இதற்கு கிராமசபை எனும் அமைப்பு சிறந்ததோர் அமைப்பு.

கிராமசபைக்கு அதிக அதிகாரங்களை

26, 27 செப்டம்பர் 2008, சென்னையில் நடைபெற்ற தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பின் 15வது செயற்குழு கூட்டம் மற்றும் சுற்றுசூழல் மற்றும் பொதுவளங்கள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கில் சுற்றுக்கு விடப்பட்டது.

## ஊராட்சி தலைவர்கள் டிஸ்மிஸ்

அரசு ஒதுக்கிய நிதியை திட்டங்களுக்கு பயன்படுத்தாமல் கையாடல் செய்த இரு ஊராட்சித் தலைவர்களை, திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ராஜேந்திரகுமார் அதிரடியாக பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு திருவள்ளூர் மாவட்டத்தில் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த லைட் அவுஸ் குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.தங்கவேல் என்பவர் ஊராட்சி பொது நிதியில் இருந்து நிதியை முறைகேடு செய்து விதிகளை மீறி செயல் பட்டுள்ளதாக தெரியவந்தது.

அவரை அப்பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்து கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இதே மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் கொட்டையூர் ஊராட்சி மன்றத் தலைவர் பி.சிவக்குமார் என்பவரும் ஊராட்சி பொது நிதியில் இருந்து நிதி முறைகேடு செயது விதிகளை மீறி செயல்பட்டும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி உள்ளது தெரியவந்தது.

இது குறித்து ஆய்வு மேற்கொண்ட அதிகாரிகள் அளித்த அறிக்கையின்படி, கொட்டையூர் ஊராட்சி மன்றத் தலைவர் பி.சிவக்குமாரை அப்பதவியில் இருந்து மாவட்ட கலெக்டர் பதவி நீக்கம் செய்து உத்தவிட்டார்.

**தினமலர், 4.10.2008**

வழங்கிடவும், தற்போதுள்ள குறைபாடுகளை அகற்றிடவும் அரசினை மக்கள் வலியுறுத்திட வேண்டும். அதே போன்று தங்களது உள்ளூர் சமூகத்திற்கும் குறிப்பாக, சமூக ஒடுக்குமுறைக்கு ஆளாகும் தலித், பெண்கள் மற்றும் இதர உழைக்கும் பிரிவினரின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் கிராம சபையை மக்கள் முழுமையாகப் பயன்படுத்திட வேண்டும்.

# தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் மற்றும் பஞ்சாயத்துக்கள் தேசிய அளவிலான மாநாடு / 14 - 15 அக்டோபர், 2008, சமூக அறிவியல் மையம், புதுதில்லி

ஜனநாயகம்! இந்த ஜனநாயகத்தை தேசிய மற்றும் மாநில அளவிலிருந்து பரவலாக்கி கிராம அளவில் செய்லபடவைப்பதே ஊராட்சி, தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் படி கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

தேசிய அளவில் பல்வேறு மக்கள் அமைப்புகல் உள்ளாட்சி அமைப்பை அரசியல் சட்ட ரீதியாக நெறிப்படுத்த ஆரம்ப காலக்கட்டத்தில் முயற்சிகள் மேற்கொண்டன. அதன் விளைவாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 73 மற்றும் 74வது திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 1993ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி முதல் அனைத்து மாநிலங்களிலும் இச்சட்டத்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கி கிராம அளவில் சுயமாக செயல்பட வழிவகை செய்துள்ளது.
2. கிராம ஊராட்சி சமூக நீதி, சமவாய்ப்பு, சமத்துவம் என்று ஜனநாயக ரீதியில் திட்டங்களை நிறைவேற்றி சுயமாக செயல்பட உதவுகிறது.
3. இச்சட்டத்திருத்தம் தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் பழங்குடியினருக்கு நிர்வாகத்தில் பங்கேற்கும் உரிமையை பெற்றுத்தந்துள்ளது.
4. குறிப்பாக பெண்கள் தலைமை பொறுப்பு ஏற்று நிர்வாகத்தில் முக்கிய முடிவெடுக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி ஜனநாயகத்தை நிலைநிறுத்தியுள்ளது.
5. கிராம முன்னேற்றத்திற்கான செயல்பாட்டில் அனைவரும் பங்கேற்கவும், முடிவெடுக்கவும், கிராம ஊராட்சி தலைவர் மக்களிடையே வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள கிராம சபைக் கூட்டம் வழிவகை செய்கிறது.

இந்தச் சூழ்நிலையில் மக்களிடையே இது குறித்த சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் அரசு சாரா அமைப்புகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இதன் வெளிப்பாடாக பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒருங்கிணைந்து மாநில அளவிலான கூட்டமைப்பை உருவாக்கி செயல்பட்டு வருகின்றனர்.

தலைவர்களின் செயல்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்கவும், பிற தலைவர்களோடு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், சிறப்பான உள்ளாட்சி அரசாங்கம் நடத்தத் திட்டமிடவும் இக்கூட்டமைப்பு பயன்படுகின்றது.

தங்களின் சவால்களை எதிர்கொள்ளும் யுக்திகளையும், உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளும் முறையினையும் அரிய, வாய்ப்பாக இந்தக் கூட்டமைப்பு அமைகிறது.

மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும் வகையில் உருவாக்கப்பட்ட 100 நாள் வேலைக்கான 'தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் – 2005'' பஞ்சாயத்துகள் மூலம் பல மாநிலங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இது தொடர்பாக முத்தாய்பாக (NREGA & PANCHAYATS) ''தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் மற்றும் பஞ்சாயத்துகள்'' என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய அளவிலான மாநாடு தில்லி, சமூக அறிவியல் மையம் (Institute of Social Science) குழுவினரால் புது தில்லியில் 14 மற்றும் 15 அக்டோபர் 2008ல் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழகம் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலைவர்கள் பிற

மாநிலங்களிலிருந்தும் பங்கேற்றனர். இரண்டு நாள் அமர்வுகளும் மிகவும் பயனுள்ள விதமாக அமைந்திருந்தது. பல மாநிலத் தலைவர்களையும் சந்தித்து அவர்களின் அனுபவங்களை தெரிந்து கொள்ளமுடிந்தது. அவற்றிலிருந்து சில..

- ஊராட்சி மன்றத்தின் செயல்பாடுகள் குறித்த தலைவர்களின் அனுபவப்பகிர்வு நல்ல படிப்பினையாக அமைந்தது.
- பெண் தலைவர்களின் தலைமைப்பண்பு சமத்துவ சமுதாயத்தை அமைக்கும் அடித்தளமாக அமைகிறது.
- ''அதிகாரப் பகிர்வு'' பெண்களின் ஆளுமையை வளர்த்து கொள்ள வாய்ப்பாக அமைந்திருக்கிறது.
- ''அதிகாரப் பரவல்'' மக்களையும் கிராம சபைக் கூட்டங்களில் பங்கேற்பாளர்களாக மாற்றியுள்ளது.
- கிராமசபைக் கூட்டங்களில் மக்கள் பகேற்பதன் மூலம் 'அதிகாரப்பரவல்' ஏற்பட்டுள்ளது.
- திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும், மக்களை சரியான வழிகாட்டுதலுடன் கொண்டு செல்ல வேண்டிய கடமையையும் உருவாக்குகிறது.
- மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் மக்களை பயனடையச் செய்ய உழைக்க வேண்டி இருக்கிறது.
- மக்களின் எதிர்பார்ப்புகள், எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.
- அரசியல், சமூகம், பொருளாதாரம் மற்றும் பாலின ரீதியான சவால்களை எதிர்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சந்திக்கின்ற சவால்கள்:

- அதிகாரிகளின் தேவையற்ற தலையீடு
- தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் (NREGA) வேலையில் ஏற்படக்கூடிய தொழில்நுட்ப மற்றும் கூலிப்பிரச்சனைகள்
- பாலின ரீதியான சுரண்டல்
- சாதிய ஒடுக்குமுறை–சமவாய்ப்பு மறுக்கப்படுதல்
- அதிகார துஷ்பிரயோகம்
- பணம் கையாடல்
- முடிவெடுக்கும் அதிகாரம் இன்மை

ஊராட்சித் தலைவர்கள் வாய்ப்புகளை பயன்படுத்தி தங்களை சித்தாந்த அளவில் வளர்த்துக் கொண்டு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். குறிப்பாக பெண் தலைவர்களின் நிலை பரவலாக பின்தங்கியே காணப்படுகிறது. பயிற்சிகள், கருத்தரங்குகள் மட்டுமே மாற்றத்தை கொண்டுவந்துவிட முடியாது. ஒட்டு மொத்த ஊராட்சித் தலைவர்களின் ஒருங்கிணைந்த போராட்டம் தான் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமையும்.

தலித் பெண்கள் மற்றும் பழங்குடியினரின் நிலை மிகவும் பின் தங்கியே காணப்படுகிறது. சமவாய்ப்பு வழங்கும் போது தன்னைவிட பெரியவனாகிவிடுவானோ என்ற அச்சமே சமூகத்தில் எப்பொழுதுமே தனக்கு கீழ் ஒருவன் இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஒரு வட்டத்தை உருவாக்கிக் கொண்டு, அதை விட்டு விலகி வர விரும்புவது கிடையாது. இந்த நிலை தான் அரசியலிலும் தனக்கென்று கொடுக்கப்பட்ட பதவியை தக்கவைத்துக் கொள்ள எதைச் செய்யவும் தயங்குவது இல்லை. அதே சமயத்தில் இதனால் ஏற்படுகின்ற பாதிப்பிற்கு பொறுப்பேற்கவோ அதற்கான தீர்வை முன்வைக்கவோ தயாராக இல்லை. இவர்கள் எப்படி சமூகத்தில் பிறருக்கு உதாரணமாக இருந்துவிட முடியும்? ஆரம்ப காலகட்டத்தில் அரசியல் சாயம் பூசப்படாமல் இருந்த உள்ளாட்சி அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையினை மாற்றி அமைக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் நமக்கு இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்களாகிய நாம் ஒன்றாக இணைந்து நமக்குக் கொடுக்கப்பட்ட இந்த மக்கள் பணியை வெறும் வேலையாக மட்டும் எண்ணாமல்

சேவையாக நினைத்து பணிபுரிவது மிகவும் அவசியம்.

பஞ்சாயத்தில் எடுக்கப்படக் கூடிய முடிவுகளை மக்களுடன் கலந்துபேசி கிராம சபைக் கூட்டங்களில் ஒப்புதல் பெற்று நடைமுறைப்படுத்தப்படுவது சிறப்பம்சமாக இருக்கிறது. மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வை அவர்களிடமே ஒப்படைப்பதும் சிறந்ததாக அமைகிறது.

# தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதிச் சட்டம் (NREGA) மற்றும் பஞ்சாயத்துக்கள்-தேசிய அளவிலான மாநாடு, 14 - 15 அக்டோபர், 2008, புதுதில்லி

## <u>தீர்மானங்கள்</u>

''தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதிச் சட்டம் மற்றும் பஞ்சாயத்துகள்'' பற்றிய தகவல்களை தெரிந்து கொண்டு அவற்றை பரிமாறிக் கொள்ள இரண்டு நாள் கருத்தரங்கு தில்லியில் சமூக அறிவியல் மையக் குழுவினரால் 14 & 15 அக்டோபர் 2008, ஆகிய தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 1,300 க்கும் மேற்பட்ட பஞ்சாயத்து தலைவர்கள் பங்கேற்று பல கருத்துக்களை முன்வைத்தனர்.

கிராமத்திலுள்ள வறுமையைப் போக்க கையாளப்படுகின்ற ஜனநாயக முறைகளுள் NREGA குறிப்பிடத்தக்கது. பஞ்சாய்த்து ராஜின் வாயிலாக ஜனநாயகத்துடன் தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தை அமலாக்குவது என்பது மற்றொரு மிகச் சிறந்த அம்சமாகும். அனைவரும் ஏற்றுகொள்ளக் கூடிய முறையில் NREGA ஐ பரவலாக நடைமுறைபடுத்துவது ஒவ்வொருவரையும் பலப்படுத்தும் வகையில் பயனுள்ளதாக அமையும். இந்தச் சட்டத்தை நடைமுறைபடுத்துவதை பொறுத்த வரையில் ஊராட்சிகள் மட்டுமே அதிகாரம் பெற்றிருக்கின்றன. ஊராட்சிப் பணிகள் மற்றும் கிராம சபைக் கூட்டம் கூட்டுவது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் ஊராட்சிகள் மூலம் சூசுநுழுஹ திட்டத்தை சிறந்த முறைகயில் அமலாக்க உதவிட ஒன்றியத்தாலோ அல்லது மாநில அரசாலோ எவ்விதமான தீர்க்கமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கான முயற்சியையும் பெரும்பாலும் அவர்கள் எடுக்கத் தவறிவிடுகின்றனர்.

இத்திட்டத்தைப் பொறுத்தவரை அதிகப்படியான சாதனை நிகழ்வுகள் வெளிவந்துள்ளன. இந்தப் பெருமை அனைத்தும் ஊராட்சிகளையே சாரும். அதே சமயத்தில் உண்மையிலேயே உள்ளாட்சி அமைப்புகள் வலுப்பெற்றுள்ளனவா என்பதை உற்று நோக்க வேண்டியது அடிப்படையான விஷயம். இத்திட்டத்தை நடைமுறை படுத்தும் நிகழ்வில் பெரும்பாலான ஊராட்சிகள் ஒதுக்கப்படுகின்றன. இந்த நிகழ்வின் முழுமையிலும் எந்தவித கட்டுப்பாடும் இல்லை. இத்திட்டத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கு ஊராட்சிகள் மீது மட்டமே நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

இங்கே கூடியிருக்கின்ற பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் தேந்தெடுக்கப்பட்ட தலைவர்களாகிய நாங்கள் ''எங்கள் பஞ்சாயத்து நேர்மையின் உண்மையின் சிகரம் என்று கூறவில்லை. ஊழல் சம்பவங்கள் பஞ்சாயத்திலும் நிகழத்தான் செய்கிறது. அதற்காக பஞ்சாயத்தை மட்டுமே நாம் குறைசொல்லி விடவும் முடியாது. மாநில அரசும் இந்தச் சமுதாயமும் ஒட்டு மொத்த பொறுப்பேற்க வேண்டும். ஆனால் இதற்கான முழுமையான தீர்வு காண பஞ்சாயத்துக்களுக்கு மேலும் பொறுப்புகளையும் அவற்றை நிறைவேற்ற அதிகாரத்தையும் வழங்க வேண்டும்.

நாட்டில் இருக்கக்கூடிய வறுமைக்கு எதிராகப் போராடி வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதில் NREGA முக்கிய பங்குவகிக்கிறது. பஞ்சாயத்து அமைப்பின் மூலமாக வரலாற்றுச் சிறப்புமிக்க செயல்பாட்டை முழுமுயற்சியுடன் கையாளுவது மிக முக்கியமானது. இதற்காக நாங்கள் எடுக்க கூடிய தீர்மானங்கள் பின்வருமாறு:

- ★ NREGA வை பஞ்சாயத்து ராஜ்மூலம் நடைமுறைபடுத்துவது அவசியம்.
- ★ கிராமங்களில் வேலை செய்வதற்கான உரிமையை வாழ்வாதார உரிமையாக அங்கீகரித்து அதை பஞ்சாயத்து

அமைப்பு மூலமாக செயல்படுத்துதல் அவசியம்.

- ★ NREGA திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி மாநில அரசின் வேறு எந்த திட்டத்திற்காகவும் பயன்படுத்தப்படக் கூடாது என இருக்க வலியுறுத்துகிறோம்.
- ★ பஞ்சாயத்து வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பணி பஞ்சாயத்திலேயே திட்டமிடப்பட்டு கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.
- ★ பஞ்சாயத்து வங்கிக் கணக்கிற்க்கு NREGA நிதி முறையாக மாற்றப்பட வேண்டும் (பஞ்சாயத்து வங்கிக் கணக்கு பூச்சியமாக இருத்தல் அவசியம்).
- ★ NREGS ன் சட்டப்படி 50% நிதி கிராம பஞ்சாயத்தின் மூலம் பயன்படுத்தப் பட வேண்டும். மீதமுள்ள நிதி ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட பஞ்சாயத்தின் மாவட்ட அளவிலான திட்டங்களுடன் இணைந்து பயன்படுத்தப்பட வேண்டும்.
- ★ NREGS–ன் மாவட்ட அளவிலான திட்டத்திற்கு மாவட்ட திட்டமிடல் குழு ஒப்புதல் தர வேண்டும்.
- ★ NREGAல் கூறப்பட்டுள்ள ''ஆணுக்கும் பெண்ணுக்கும் சம கூலி'' என்பதை பஞ்சாயத்துகள் கொள்கை அளவில் கொண்டுள்ளனவா என உறுதி செய்யப்படவேண்டும்.
- ★ தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துவது அவசியம்.
- ★ ஒரே மாநிலத்திற்குள் இடத்திற்கு இடம் குறைந்தபட்ச கூலி வேறுபடுகிறது மாவட்ட திட்டக் குழு பஞ்சாயத்துடன் கலந்துபேசி கூலியை நிர்ணயிக்க வேண்டும்.
- ★ NREGA–வில் பணியாளர் அட்டை வழங்குவதற்கு வாக்காளர் அட்டை (அ) குடும்ப அட்டை தகுதிச் சான்றாக வைப்பதை கட்டாயப்படுத்த வேண்டும்.
- ★ NREGA திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற அனைத்து பணிகளையும் ஒவ்வொரு ஆண்டும் கண்காணிக்க ஒவ்வொரு மாநில அரசும் கட்டாயமாக தனி NREGA ஆணையரை நியமித்தல் அவசியம். அவர்கள் மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைமையின் கீழ் மாவட்டங்களில் ஆய்வுசெய்ய வேண்டும். மாவட்ட அளவிலான அறிக்கையை மாநில அவையிலும் இவர்கள் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.
- ★ NREGA செயல்பாடுகளின் அடிப்படையில் மாவட்டங்களை தரம்பிரிப்பது என்பது மாவட்டம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம பஞ்சாயத்து என்ற அடிப்படையில் அமைய வேண்டும்.
- ★ பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கான பயிற்சி என்பது NREGA – ன் பல்வேறுபட்ட கோணங்களை தெளிவுபடுத்துவதை பிரதான நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். அதற்கான செலவுகளை எந்தநிதியிருந்து செலவிடலாம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.
- ★ இந்தச் சமூகத்தில் பஞ்சாயத்து மற்றும் NREGA ன் செயல்பாட்டை ஊழல் மற்றும் முறைகேடுகள் வாயிலாக சிதைத்து வைத்து இருக்கின்றனர். பஞ்சாயத்துகள் தொடர்ந்து சிறப்பான முறையில் கிராம சபைக் கூட்டங்களை நடத்தி இந்நிலையினை முற்றிலுமாக மாற்றி அமைக்க வேண்டும்.
- ★ பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் தேந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் பொறுப்புகள் அதிகரித்துக்கொண்டே செல்வதால் குறிப்பிட்ட அளவு ஊக்கத்தொகை வழங்க வேண்டும்.
- ★ NREGA வேலைகளை வழிநடத்தி செல்ல தொழில் சார்ந்த உதவியாளர்கள் தேவை.
- ★ NREGA ல் ஏற்படுகின்ற தவறுகளுக்கும், தோல்விகளுக்கும் பஞ்சாயத்து தலைவர்கள் மட்டுமே பொறுப்பேற்க நேரிடுகிறது. வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஏனைய அலுவலர்களின் தலையீடு இன்றி எதுவும் நடப்பதில்லை. ஆகவே அவர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

நமது கிராம மக்களின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கான கருவியாக NREGAன் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் அமைந்திருப்பது சிறப்பான அம்சமாக நமது கருத்துக் கணிப்பிலிருந்து உணர முடிகிறது. இந்த இரண்டு நாள் தேசிய அளவிலான ''NREGA மற்றும் பஞ்சாயத்துகள்'' கருத்தரங்கில் கலந்து கொண்டு இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வந்து கலந்து கொண்ட பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் நாம் அனைவரும் தூய்மையாக திறமையோடு மக்களை மையப்படுத்தி மட்டுமே உழைத்து இத்திட்டம் (NREGA) இந்த நூற்றாண்டுக்கான வளர்ச்சி குறிக்கோளை எட்டுவதற்கு வழிவகுப்போம் பாடுபடுவோம் என உறுதியளிக்கிறோம்.

# வழக்குகள் இல்லாத கேரள ஊராட்சி

## செரியநாடு ஊராட்சி இந்தியாவின் முதல் சட்ட அறிவு பெற்ற ஊராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஒட்டுமொத்த கல்வி அறிவு பெறுவதற்கான கேரள மாநிலத்தின் விடாமுயற்சியின் பயனாக வழக்குகளைக் கட்டுபடுத்துவதிலும் மற்றும் சட்ட அறிவு பெற்றதிலும் இந்தியாவின் முதல் ஊராட்சியாக ஆலப்புழா மாவட்டத்திலுள்ள செரியநாடு ஊராட்சி அறிவிக்கப்பட்டுள்ளது.

1988ல் உருவாக்கப்பட்ட புதுமையான கொள்கையான ''வழக்குகளே இல்லை'' என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு கூடுதலாக உருவாக்கப்பட்ட பஞ்சாயத்து நீதிமன்றம் மூலம் தொடக்கத்திலிருந்து பதிவு செய்யப்பட்டிருந்த 1500 பிரச்சனைகளையும் குறிப்பாக 676 வழக்குகளை பேச்சுவார்த்தை வாயிலாக சுமூகமான முடிவுக்குக் கொண்டுவந்தது. கேரள உயர்நீதிமன்ற நீதிபதிகளின் உதவியுடன், மாநில சட்ட உதவிகள் மையம் மற்றும் ஏனைய பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற சட்ட வல்லுநர்கள் கொண்ட குழு வினரின் உதவியுடன் ஊராட்சி மக்களால் உருவாக்கப்பட்ட அமைப்பும் இணைந்து வழக்குகள் இல்லாத கிராமத்தை உருவாக்கியது.

உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை தீர்த்துவைத்துள்ளது. அவற்றுள் பெரும்பாலான வழக்குகள் பஞ்சாயத்துக்குள்ளேயே தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. எதிரியாக வருகின்றவர்களை கூட இறுதியில் சமாதானத்துடன் கை குலுக்கி செல்கின்ற அளவிற்கு துணைக்குழு இருதரப்பினரையும் சமரசத்திற்கு கொண்டு வருவதாக செரியநாடு ஊராட்சி தலைவர், V.K.வாசுதேவன் கூறுகிறார். கிட்டதட்ட 7000 குடும்பங்களை கொண்ட பெரிய பஞ்சாயத்தாக இருப்பினும், இந்த வழிமுறை மக்களால் பொதுவாக வரவேற்கப்பட்டாலும் துவக்கத்தில் அதனுடைய வெற்றிகுறித்த சந்தேகம் இருந்தது.

ஒரு அதிகாரி குறிப்பிடும் பொழுது, சிறு சிறு பிரச்சனைகளுக்காக வழக்கு பதிவு செய்து பணத்தையும் நேரத்தையும் தேவையில்லாமல் வீணாக்குவதை உணர்ந்து இந்த முறையின் மூலம் சேமிக்க கற்று கொண்டிருக்கிறார்கள்.

1988 லிருந்து பஞ்சாயத்துத் தலைவர் பொறுப்பில் இருக்கின்ற திரு.வாசுதேவன் பிரச்சாரம் துவக்கப்பட்ட பொழுதும் அதன் பிறகும் பிரச்சனைகளை தீர்க்க மற்றும் முடிவெடுக்க ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி, ஒரு கல்லூரி விரிவுரையாளர், மற்றும் ஒரு பெண் இவர்களை கொண்ட குழு உருவாக்கப் பட்டதாகக் குறிப்பிட்டார்.

காலப்போக்கில் இக்குழு பஞ்சாயத்து நீதிமன்றமாக மாற்றப்பட்டது. கிராம மக்கள் தங்களின் பிரச்சனைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து கொள்ளலாம் என நினைத்தால் இங்கே புகார்களை பதிவு செய்கின்றனர். இதன் மூலம் செலவைக் குறைத்து சட்ட உதவிக்கு பயன்படுத்துகின்றனர். மேலும், ஏற்கனவே முன்சீப் (அ) மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை துரிதப்படுத்தவும் இந்த பஞ்சாயத்து உதவியாக அமைகிறது.

இந்நிலையினை நமது மாநிலத்திலும் நடைமுறைபடுத்த முயற்சிக்கலாம், அதே சமயத்தில் எந்த கட்சியையும்,

எந்த ஒரு [illegible] நடுநிலைமையுடன் செயல்படுவது மிக முக்கியம் சமூக நீதியை நிலை நாட்டி சமத்துவத்தை செயல்படுத்த முயற்சிப்போம். வெற்றி பெறுவோம்.

**டெக்கான் கிரானிக்கிள்–10.11.2008**

# தோஹா பேச்சுவார்த்தை உணவு நெருக்கடியை ஏன் தீர்க்காது என்பதற்கான ஏழு காரணங்கள்

தற்போதைய உணவு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு வழியாக, வர்த்தக உடன்பாடுகள் தொடர்பாக உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) தோஹா பேச்சுவார்த்தையை முடிவுக்குக் கொண்டுவந்து உடன்பாட்டிற்கு வர வேண்டும் என்று உலக வர்த்தகம் மற்றும் நிதி அமைப்புகளின் தலைவர்களாகிய உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி, பன்னாட்டு நிதியம் (IMF), பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடு அமைப்பு (OECD) ஆகிய நிறுவனங்கள் நிர்ப்பந்தித்து வருகின்றன. அந்த நிறுவனங்களின் எண்ணம் தவறானது என்பதற்கான ஏழு காரணங்களும், உலக மக்கள் தங்களுக்குத் தேவையான உணவு பெறுவதை உறுதிப்படுத்த உதவக்கூடிய மூன்று திட்டவட்டமான நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளும் இங்கே முன்வைக்கப்படுகின்றன.

## ஏன் இந்த நெருக்கடி ?

தொடர்ச்சியான சில நிலைமைகளின் விளைவாகவே இந்த உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அந்த நிலைமைகள் எல்லாமே முக்கியமானவையாகும். உணவு விநியோகத் தரப்பில் உள்ள காரணங்களில் முக்கியமான சில காரணங்கள் வருமாறு: கோதுமை, அரிசி, சோளம் உள்ளிட்ட உணவு தானியங்களின் இருப்பு கவலையளிக்கும் வகையில் குறைவாக இருப்பது; எண்ணெய் விலை கடுமையாக அதிகரிப்பு, முக்கிய உணவு தானிய உற்பத்தி வட்டாரங்களில், (குறிப்பாக ஆஸ்திரேலியா, அர்ஜன்டைனா, அமெரிக்கா, கனடா போன்ற வேறு பல நாடுகளிலும்) தட்பவெப்பநிலை மிக மோசமாகியிருப்பது; இயற்கை ஆதாரங்கள் – குறிப்பாக தண்ணீர், மண் போன்றவை – அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு சீர்குலையும் நிலையை எட்டியிருப்பது ஆகியவை சில முக்கிய காரணங்களாகும். அடிப்படைத்தேவைகளில் உள்ள சில முக்கிய காரணங்கள் வருமாறு: பால் பண்ணை சார்ந்த உணவுகள் மற்றும் இறைச்சி உணவுகளை உலகில் இன்று மேலும் மேலும் அதிகமான மக்கள் வாங்கமுடிகிறது; பணக்கார நாடுகள் உணவு தானியங்களை பெட்ரோலிய எண்ணெக்கு மாற்றாக இயற்கை எரிபொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்தப் பின்னணியில், முன்னெப்போதும் காணாத அளவுக்கு சரக்குச் சந்தைகளில் செய்யப்படும் அதிகமான முதலீடுகளும் ஊக பேரங்களும் விலைவாசியை மேலும் மேலும் உயரமாக விண்ணில் பறக்கச் செய்கின்றன. உண்மையான விநியோகமும் உண்மையான தேவையும் ஏற்படுத்துகிற நிலைமையை விட அதிகமாக விலைவாசியை உயர்த்துகின்றன.

## உணவு நெருக்கடியைப் போக்க தோஹா பேச்சுவார்த்தை உதவாது! ஏன் ?

### 1. ஏழை நாடுகள் தங்களது உணவுத் தேவைக்கு மேலும் மேலும் இறக்குமதிகளைச் சார்ந்திருக்கும் நிலையையே தோஹா உடன்பாடு ஏற்படுத்தும்.

மூன்றில் இரண்டு பங்கு வளரும் நாடுகள் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை மொத்தமாக இறக்குமதி செய்தே பெறுகின்றன. ஏழை நாடுகளைப் பொறுத்தவரையில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். கடந்த இருபது ஆண்டுகளில் வேளாண் சந்தையை தாராளமயமாக்க மேற்கொள்ளப்பட்ட அவசர நடவடிக்கைகள் ஏழை வேளாண் உற்பத்தியாளர்களை அரசாங்க உதவி கிடைக்காதவர்களாக நிறுத்தியுள்ளன. மிகப்பெரும் இறக்குமதிகள், பெருமளவுக்கு மான்யங்களுடனான இறக்குமதிகள், விவசாயத்தில் உள்ளூர் உற்பத்தியையையும் முதலீட்டையும் ஊக்கமிழக்கச் செய்துள்ளன. இந்த நாடுகளின் அரசுகள் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் வட்டார உணவு உற்பத்தி அமைப்புகளை மறு கட்டுமானம் செய்யவும் ஊக்குவிப்பதற்கு மாறாக, இறக்குமதிகளையே மேலும் மேலும சார்ந்திருக்கச் செய்பவையாகவே தோஹா பேச்சுவார்த்தையின் வர்த்தக தாராளமய ஆலோசனைகள் உள்ளன.

### 2. உணவு மற்றும் வேளாண் உற்பத்தி விலைகளை தோஹா உடன்பாடு அதிகரித்துவிடும்

விலைவாசி உயர்வு ஏற்படும்போது அதன் பாதிப்புகளை மட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி–ஏற்றுமதி அளவுகளைக் கட்டுப்படுத்துவது, உள்நாட்டு கையிருப்புகளை நிர்வகிப்பது, விலைக்கட்டுப்பாடு மற்றும் விலை ஆதரவு ஏற்பாடுகளைப் பயன்படுத்துவது, ரேஷன் முறைகள் மூலம் நுகர்வோர்

மான்யங்களை ஏற்படுத்துவது இன்ன பிற நடவடிக்கைககளை முன்பு அரசுகள் பயன்படுத்திவந்தன. தற்போதைய வர்த்தக மற்றும் முதலீட்டு உடன்பாடுகளின் கீழ் அந்த நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது; அல்லது ஊக்கமிழக்கச் செய்யப்படுகிறது. தோஹா பேச்சுவார்த்தை அம்சங்களோ, வர்த்தக ஆதரவு நடவடிக்கைகளையும் உணவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் அரசாங்கங்கள் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமல் அதற்கான வழிகளை மேலும் கட்டுப்படுத்துகிறது.

### 3. பன்னாட்டு விவசாய வர்த்தகத்தின் வல்லமையை தோஹா பேச்சுவார்த்தை மேலும் வலுப்படுத்தும்

2006ம் ஆண்டுக்குப் பிறகு, உலகில் ஆதிக்கம் செலுத்தும் தானிய வர்த்தகர்களாகிய கார்கில், ஆர்ச்சர் டேனியல் மிட்லாண்ட் (ATM), புங்கே ஆகிய மூன்று நிறுவனங்களின் லாபம் முறையே 36 சதவீதம், 67 சதவீதம், 59 சதவீதம் என அதிகரித்துள்ளது. கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட வர்த்தகத்தால் போட்டிச் சட்டத்தில் பெரிய இடைவெளிகள் ஏற்பட்டன, பன்னாட்டு வேளாண் வர்த்தக நிறுவனங்களுக்கு மிகப்பெரிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. உட்டோ (WTO) அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின், பன்முக வர்த்தக விதிகள் உணவு விற்பனை அமைப்பில் ஆதிக்கம் செலுத்துகிறவர்களின் நிலையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால் இதற்காக, மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த விவசாயிகளின் நலன்களும் உள்ளூர் வர்த்தக நலன்களும் கைவிடப்பட்டுள்ளன.

### 4. நிதி சார்ந்த ஊக பேரத்தை தோஹா பேச்சுவார்த்தை ஒழுங்குபடுத்தாது

2000வது ஆண்டுக்குப் பின் சரக்குச் சந்தைகளில் நிதி சார்ந்த ஊக பேரங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. சரக்குச் சந்தைகளில் விலைகள் அதிகரித்துக்கொண்டே போவதற்கு சரக்குகளில் செய்யப்படும் இந்த புதிய வகை முதலீடுகள் முக்கிய காரணமாகும் என்று எஃப்ஏஓ, மற்றும் யுஎன்சிடிஏடீ (FAO, UNCTAD) ஆகிய இரண்டு அமைப்புகளுமே சுட்டிக் காட்டியுள்ளன. உணவுச் சந்தையில் ஊக பேர முதலீட்டை கட்டுப்படுத்துவது தொடர்பாக தோஹா நிகழ்ச்சிநிரலில் எதுவும் இல்லை.

### 5. சுற்றுச் சூழல் நெருக்கடி, தட்பவெப்ப மாற்றம் ஆகிய பிரச்சனைகளுக்கு தோஹா பேச்சுவார்த்தையில் தீர்வு இல்லை

உணவு நெருக்கடிக்கு மோசமான வானிலை முக்கிய காரணமாகும். அதீதமான தட்பவெப்பம் உணவு உற்பத்தியை தொடர்ந்து சீர்குலைக்கும் என்று தட்பவெப்பம் தொடர்பான சர்வதேச அமைப்பு கூறுகிறது. சுற்றுச்சூழல் கேடு, இயற்கை வளங்களின் வறட்சி ஆகிய இரண்டுமே வர்த்தகத்தோடு தொடர்புடையவை. உட்டோ (WTO) அமைப்பு ஏற்படுத்தப்பட்டு 14 ஆண்டுகள் கடந்த பிறகும், இந்த இரண்டுக்குமான செலவுகளை ஏற்பது குறித்து அரசுகளால் இன்னும் இணக்கமான ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. தட்பவெப்ப மாறுதல் தொடர்பான மாநாட்டு முடிவுகள் உள்பட ஐ.நா. அமைப்பின் சுற்றுச் சூழல் உடன்பாடுகளோடு உட்டோ அமைப்பு முரண்படுகிறது. வர்த்தகத்தை பாதிக்காததாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது, சுற்றுச்சூழல் பொறுப்புகளைத் தட்டிக்கழிப்பது ஆகிய அணுகுமுறைகளால் ஐ.நா. உடன்பாடுகளோடு முரண்படுகிறது உட்டோ (WTO).

### 6. தோஹா பேச்சுவார்த்தை பெட்ரோலிய எண்ணெய் விலையைக் குறைக்காது

2008 ஏப்ரல் 30ல் கச்சா எண்ணெய் விலை பாரலுக்கு 119 டாலராக உயர்ந்தது. ஓராண்டுக்கு முன் இருந்ததைவிட 74 சதவீதம் எண்ணெய் விலை அதிகரித்திருக்கிறது. கடந்த 100 ஆண்டுகளின் சராசரி விலையைவிட கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகரித்திருக்கிறது. தொழில்துறை சார்ந்த விவசாயத்தில் எண்ணெய் ஒரு முக்கிய மூலப்பொருளாகும். உரம், பூச்சி மருந்து, பாசன பம்புகள், பண்ணை எந்திரங்கள், போக்குவரத்து ஆகியவற்றில் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் விலை அதிகரிப்பது உணவு விலைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எண்ணெய் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) என்ற விநியோகிப்பாளர்களின் ஒரு ஏகபோகக் கூட்டு அமைப்புதான். அந்த அமைப்பால் சந்தையில் ஏற்பட்டுள்ள சீர்குலைவுகள் குறித்து விவாதிப்பதற்கான எந்த ஒரு ஏற்பாடும் தோஹா பேச்சுவார்த்தையில் இல்லை.

### 7. பன்னாட்டு உயிரி எரிபொருள் வர்த்தகத்தை தோஹா பேச்சுவார்த்தை முறைப்படுத்தாது

கடந்த சில ஆண்டுகளில் உயிரி எரிபொருள்கள்

(Biofuel) மீதான முதலீடுகள் பெருமளவுக்கு அதிகரித்துள்ளன. எண்ணெய் விலை உயர்வு இதற்கு ஒரு முக்கிய காரணம். இந்த அதிகமான முதலீடுகள் சில நாடுகளில் நிலத்தையும் தண்ணீரையும் உணவுக்காக அல்லாமல் உயிரி எரிபொருளுக்காகப் பயன்படுத்துவது தொடர்பாக நேரடி மோதல்களை ஏற்படுத்தியுள்ளன. தோஹா பேச்சுவார்த்தை எல்லா விவசாயப் பொருள்களின் வர்த்தகத்தையும் விரிவுபடுத்தும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. எதற்காக அந்த விவசாய விளைபொருள்கள் பயன்படுத்தப்படும் என்பது குறித்து தோஹா பேச்சுவார்த்தை அக்கறைகொள்ளவில்லை. எனவே அரசுகள் உணவு உற்பத்திக்கு முன்னுரிமை கொடுக்க வைப்பதில் தோஹா பேச்சுவார்த்தை எந்த வகையிலும் உதவாது.

## அரசுகள் மேற்கொள்ள வேண்டிய மூன்று வர்த்தக நடவடிக்கைகள்

### 1. விவசாயம் தொடர்பான உருகுவே உடன்பாட்டையும் (AoA) தோஹா கட்டளையையும் மறுபரிசீலனை செய்க

விவசாய உடன்பாடு மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். உள்நாட்டு உணவு உற்பத்தி மற்றும் விவசாய முறைகளை வலுப்படுத்தும் கொள்கைகளை செயல்படுத்த அரசுகள் அனுமதிக்கப்பட வேண்டும். மான்ய உதவிகளோடு வரும் உணவுப்பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கக்கூடிய சட்டவிதிகள் அரசுகளுக்குத் தேவை. மற்ற நாடுகளின் உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள் ஆகியவற்றுக்குத் தீங்கு ஏற்படுத்துவதை பன்முக வர்த்தக விதிகள் தவிர்க்க வேண்டும். வர்த்தகம் என்பதை அரசுகள் ஒரு கருவியாகத்தான் கையாள வேண்டுமேயல்லாமல், உள்ளூர்ச் சந்தையில் முதலீடு செய்வதற்கான மாற்றாகக் கையாளக் கூடாது. வளர்ச்சிக்கு உள்ளூர் உற்பத்தியும் வேலைவாய்ப்புகளும் அவசியமானவையாகும்.

### 2. உணவு மற்றும் விவசாயம் சார்ந்த விலை உயர்வைத் தடுத்திடுக

அரசுகள் தேசிய அளவிலும் வட்டார அளவிலும் பொது இருப்புகளை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். விலை உயரும்போதும், உணவுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்படும்போதும் ஒரு முக்கியமான பாதுகாப்பாக பொது இருப்புகள் பயன்படுகின்றன. விலை உயர்வைக் கட்டுப்படுத்த சர்வதேச அளவில் உணவு விநியோகத்தை நிர்வகிப்பதில் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவைப்படுகின்றன. உலக சரக்குச் சந்தைகளில் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதையும், நுகர்வோருக்கு உயர்தரமான விவசாயப் பொருள்கள் நம்பகமான முறையில் கிடைப்பதையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு வழியாகும். வெளிப்படையான முறையில் இருப்பு வைப்பது பதுக்கலையும் சரக்குச் சந்தை ஊக பேரத்தையும் கூட ஊக்கமிழக்கச் செய்யும். உட்டோ அமைப்பில் ஆப்பிரிக்க நாடுகளின் குழு, சரக்குச் சந்தைகளை உறுதிப்படுத்துவதற்கான ஒரு ஆலோசனையை முன்வைத்துள்ளது. அந்த ஆலோசனை தொடர்பாக மேலும் கவனம் செலுத்தப்படுவது அவசியம்.

### 3. உலகப் போட்டி விதிகளை உருவாக்குக

உலக சரக்குச் சந்தையிலும் உணவுச் சந்தையிலும் சில பன்னாட்டு நிறுவனங்கள் செலுத்துகிற சந்தை ஆதிக்கம் எந்த அளவுக்கு சீர்குலைவுகளை ஏற்படுத்துகிறது என்பதை, பன்னாட்டு வர்த்தக விதிகள் இனியும் புறக்கணிக்க முடியாது. விவசாய வர்த்தக நிறுவனங்களின் சந்தை வலிமையைக் கட்டுப்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது. முதல் நடவடிக்கையாக, இந்த நிறுவனங்களின் ஆதிக்கநிலை குறித்து விவரங்கள் ஆவணப்படுத்தப்படுவது அவசியம். நிறுவனங்கள் தங்களுடைய சந்தை ஆதிக்கத்தை தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் வர்த்தகப் போட்டி விதிகளை உருவாக்குவது குறித்தும் நாடுகள் பரிசீலிக்க வேண்டும். இதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக கட்டுப்பாடான வர்த்தக முறைகள் தொடர்பான UNCTAD விதிகளை பயன்படுத்த முடியும்.

இக்கடிதம் உலக வர்த்தக அமைப்பில் **(WTO)** வேளாண்மை ஒப்பந்தம் **(AoA)** ஜீலை 21 ஜெனிவா அமைச்சர்கள் மாநாடும் – அதன் விளைவுகளும் குறித்து நடந்த தென்னிந்திய விவசாயிகள் சங்க தலைவர்கள் கலந்தாலோசனை கூட்டத்தில் சுற்றுக்கு விடப்பட்டது.

# ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் செயலாளர், ஆணையருடன் பெண் ஊராட்சித் தலைவர்கள் சந்திப்பு.

பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சுமார் 55 பேர் செப்டம்பர் 27ம் தேதி அன்று திரு திரு. அசோக்வரதன் ஷெட்டி IAS, செயலாளர், திரு. ககன்தீப்சிங் பேடி, ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அவர்களை சந்தித்து கூட்டமைப்பின் தீர்மானங்களை அளித்தனர்.

## கிராம சபை:

கிராமசபை குறித்து பேசுகையில், செயலாளர் அவர்கள், கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்கான பணம் ரூ.500/– லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தப்படும் என்று உறுதியளித்தார்.

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (NREGA)

வேலை நடக்கும் இடத்தில் ஏற்படும் நிர்வாகச் சிக்கலை புரிந்து கொண்ட அதே நேரத்தில், வேலை அளவுகளை நிர்ணயம் செய்யும் பொறியாளர்கள் அவர்களது கடமையை சீரிய முறையில் சரிவர மேற்கொள்ள வேண்டும் என்று செயலாளர் வலியுறுத்தினார். மேற்பார்வையாளர்கள் இல்லாமல் பணியை மேற்பார்வையிடுவது சிரமமாக உள்ளது, ஆனாலும் வேலைக்கு வரும் நபர்களிலிருந்து ஒருவரை மேற்பார்வையாளராக நியமிப்பது நடைமுறையில் பல சிக்கல்களை ஏற்படுத்தும். ராஜஸ்தான் மாநிலத்தில் அவ்வாறு செய்தது பல்வேறு பிரச்சனைகளுக்குக் காரணமாகிவிட்டது என்று ஆணையரும், செயலாளரும் தெரிவித்தனர். குறைந்தபட்ச கூலியை ரூ.80/–லிருந்து 100 ரூபாயாக உயர்த்தும் ஆலோசனை உள்ளது என்றும் ஆனால் அதே நேரத்தில் பல இடங்களில் விவசாயிகள் இந்தத் திட்டம் நடைமுறையில் உள்ய இடங்களில் விவசாய வேலைக்கு ஆட்கள் வர மறுக்கிறார்கள் என்று எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் என்றும், தேவைக்கேற்ப ஊராட்சியின் I அக்கவுண்டிலிருந்து பணத்தைப் பயன்படுத்தலாம் என்றும் கூறினர்.

## அண்ணா மறுமலர்ச்சித்திட்டம் (AGMT)

அனைத்துத் திட்டங்களும், திட்டங்களுக்கான பயனாளிகளும் ஊராட்சியால் தான் உறுதி செய்யப்படவேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO), வட்டார வளர்ச்சித் துணை அலுவலர் (ABDO), கிராம நிர்வாக அலுவலர் (VAO) ஆகியோர், திட்டங்களைப் பற்றிய தகவல்களை ஊராட்சிக்கு அளிக்க வேண்டும். நடைமுறையில் அவ்வாறு இல்லையென்றால் அதுபற்றி அந்தந்த மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்கலாம் என்று ஆலோசனை கூறினர்.

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்:

ஊராட்சி மற்றும் கிராம சபையின் முழுமையான ஒத்துழைப்புடன். இந்தத் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டுக்குள் வாழ்பவர்கள் பட்டியலை தீர்மானித்து, இந்தத் திட்டத்தின் பயன்கள் முழுமையாக மக்களை சென்றடைகிறதா என்பதை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

## பயணப்படி:

திருவள்ளூர், விருதுநகர் மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஊராட்சித் தலைவர்கள், அரசு ஊராட்சித்தலைவர்களுக்கான பயணப்படிக் தொகையை ஒருவருடம் முன்பே அதிகரிந்து ஆணை பிறப்பித்துள்ள போதிலும் வட்டார வளர்ச்சி அலுவலர் பயணப்படி உயர்வு குறித்த தகவல் தெரிவிக்கவில்லை என்று சொன்ன புகாருக்கு, உடனே சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு திரு. அசோக்வரதன் ஷெட்டி அவர்கள் தொலைபேசி மூலம் உத்தரவு பிறப்பித்தார்.

## <u>பஞ்சாயத்தில் உள்ள தொழிற்சாலைகள்:</u>

## தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பின் 15வது செயற்குழு கூட்டம் மற்றும் சுற்றுசூழல் மற்றும் பொதுவளங்கள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கு

26, 27 செப்டம்பர் 2008, சென்னை.

# கோரிக்கை மனு

### ஊராட்சிகளுக்கான நிதி:

ஊராட்சிகளுக்கான மாநில அரசின் நிதி சதவீதம் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படவேண்டும் என்ற முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் மீது அரசின் போதுமான நடவடிக்கையைக் கோருகிறோம். மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு எங்களது கோரிக்கையானது ஊராட்சியின் தங்குதடையற்ற நிர்வாகம் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு போதுமான நிதியாக 1996 ஆம் ஆண்டு 8% மாக இருந்த மாநில அரசின் உள்ளாட்சிகளுக்கான நிதி, தற்போது 2007 – 2008யில் தான் 9% மாக உயர்த்தப்பட்டுள்ளது. 1996–லிருந்து நிதி அதிகரிக்கப்படாததை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 1 சதவீதமாக அதிகரிப்பு என கணக்கிட்டு தற்போது உடனடியாக 18% உயர்த்தக் கோருகிறோம். மத்திய மாநில அரசின் ஊராட்சிகளுக்கான திட்ட நிதி ஊராட்சிகளை நேரடியாக சென்றடையும் வகையில் நிர்வாக மாற்றம் கொண்டுவரப்படக் கோருகிறோம்.

ஊராட்சிகளுக்கான ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்து கொள்ளப்படும் வருவாய் இனங்கள் : வருவாய் இனங்களான தலவரி, தலமேல் வரி, முத்திரைத் தாள் மேல்வரி (80 சதவீதம்) . கேளிக்கை வரி (70 சதவீதம்), மற்றும் கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் (100%) இவை வருவாய்த்துறை, மாவட்ட சார்பதிவாளர், வர்த்தக வரித்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறையால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கிராம ஊராட்சிகளுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் இந்த நிதி, மாநில அரசின் நிதிநிலையைக் காரணம் காட்டி குறித்த காலத்தில் பல்வேறு ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படாததால் ஊராட்சிகள் பெரும்நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன.

செயற்குழு உறுப்பினர்கள்

திருமிகு. வசந்தா
தலைவர், மண்டலக்கோட்டை, தஞ்சாவூர்

திருமிகு.சுகன்யா
தலைவர், வெள்ளிமலைப்பட்டினம், கோயம்புத்தூர்

திருமிகு.P.சுகந்தி
தலைவர், ஒட்டர்பாளையம், கோயம்புத்தூர்

திருமிகு.மரகதவள்ளி
தலைவர், விளாச்சேரி, மதுரை

திருமிகு.டி.சுகுணாமேரி
தலைவர், திருப்புட்குழி, காஞ்சிபுரம்

திருமிகு.எஸ்.அருள்தேவி
தலைவர், திம்மாவரம், காஞ்சிபுரம்.

திருமிகு. E.செல்வி
தலைவர், துறிஞ்சிப்பட்டு, விழுப்புரம்

திருமிகு.S.ஜெயாசுப்ரமணியன்
தலைவர், வெள்ளப்பள்ளம், நாகப்பட்டினம்

திருமிகு.A. பத்மாவதி
தலைவர், துலுக்கப்பட்டி, விருதுநகர்

திருமிகு.எஸ்.இந்திரா
தலைவர், ஒதப்பை, திருவள்ளூர்

திருமிகு. ஆர். வனிதா
தலைவர், வீராணநல்லூர், கடலூர்

திருமிகு. எம். எஸ். லட்சுமி
தலைவர், கீழ்குடி , புதுக்கோட்டை

திருமிகு. பெ.தமிழ்ச்செல்வி
தலைவர், திருவேங்கடநாதபுரம், திருநெல்வேலி

ஆலோசகர்கள்

திருமிகு.L. அமுதா
Ex தலைவர், ஈச்சம்பூண்டி

திருமிகு.ராணி
Ex தலைவர், வண்டுவாஞ்சேரி

திருமிகு.S. ருக்குமணி
Ex தலைவர், சூழியக்கோட்டை

திருமிகு.செந்தமிழ் செல்வி
Ex தலைவர், கொண்டஞ்சேரி

திருமிகு. ஞானசுந்தரி
Ex தலைவர், பொம்மகோட்டை

திருமிகு.K. பாப்பா
Ex தலைவர், ஆத்தங்கரைபட்டி

திருமிகு.மு.ரங்கநாயகி
Ex தலைவர், வெள்ளபுத்தூர்

திருமிகு.சந்திரா சர்வேசன்
Ex தலைவர், சிறுத்தொண்ட நல்லூர்

திருமிகு.A.ராணி ஆரூரான்
Ex தலைவர், ஆலங்குடி

திருமதி. ஏ.ஜம்ரூத்பீவி,
Ex தலைவர், தேவிப்பட்டினம்

திருமிகு.A.பிரேமா
Ex தலைவர், திருப்பனபந்தல்

திருமிகு.ஐ.நிர்மலா ஞானசௌந்தரி
Ex தலைவர், அனுமந்தராயன் கோட்டை

பஞ்சாயத்தில் உள்ள எந்த ஒரு தொழிற்சாலையும், அனுமதிச் சான்றிதழ் மற்றும் இயந்திரங்களை இயக்க அனுமதி வாங்கவில்லை என்றாலோ, வரி கட்டவில்லை என்றாலோ, அந்தத் தொழிற்சாலை மீது பஞ்சாயத்து நோட்டீஸ் அனுப்பி நடவடிக்கை எடுக்கலாம். திருவள்ளூரில் அவ்வாறு அனுமதியின்றி செயல்படும் DK என்டர்பிரைசஸ், ஊஜெயின் போன்ற தொழிற்சாலை மீது நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இவற்றை சரிக்கட்டுவதில் காலதாமதம், பகிர்ந்தளிப்பதில் சமச்சீரற்ற நிலையை தவிர்க்க அமைக்கப்பட்டுள்ள குழு இந்நிதி சீராகவும் விரைவாகவும் ஊராட்சிகளை சென்றடையும் வகையில் செயல்பட வேண்டும் என பரிந்துரைக்கிறோம். ஊராட்சி அரசாங்க அமைப்புகளுக்கு சொந்தமான இவ்வரியினங்கள் அந்தந்த துறையில் வசூலிக்கப்பட்டு அரசு கருவூலத்தில் சேர்க்கப்பட்டு மாநில பட்ஜெட்டில் இடம் பெறுகின்றன. இம்முறைக்கு மாற்றாக வசூலிக்கப்படும் இவ்வருவாய் இனங்களை நேரடியாக ஊராட்சிகள் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும் என்பது எங்களது முக்கியக் கோரிக்கையாகும்.

## கிராம ஊராட்சி கணக்கு பராமரிப்பு:

1994– ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 188–ஆம் பிரிவின் (3)– ஆம் உட்பிரிவின் வகைமுறைகளின்படி சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகிய இருவரால் பல்வேறு கிராம ஊராட்சிக் கணக்குகள் கூட்டாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 2007 மே மாதம் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டத்தின்படி அன்றாட மற்றும் அவசர செயற்பாடுகளை கவனிக்கின்ற வகையில் கிராம ஊராட்சி நிதி (Village Panchayat Fund Account) கணக்கினை மட்டும் செயல்படுத்த கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவரை அனுமதித்தால் போதுமானது என கருதி, பிற ஊராட்சி நிதியங்களை இயக்குவது தொடர்பாக கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் அரசால் நியமிக்கப்பட்ட ஒரு அலுவலர் கூட்டாக காசோலையில் கையெழுத்திட அரசு சட்டத் திருத்தத்தை முன்மொழிந்துள்ளது.

இச்சட்ட திருத்தம் அரசு அதிகாரிகளுக்கு அதிக அதிகாரத்தை கொடுத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அதிகாரமற்றவர்களாக்குவதுடன், அடித்தட்டளவில் அதிகார பரவலாக்கத்திற்கு எதிரானதும், வன்மையாக கண்டிக்கத்தக்கதுமாகும். ஊராட்சி மன்றத்துக்கு என இருக்கும் அதிகாரங்களே குறைவு, இருக்கும் அதிகாரங்களை மறுப்பது ஜனநாயக பரவல் என்ற கோட்பாடுக்கு முரணாகிவிடும். எனவே திருத்தப்பட்ட சட்டத்தை உடனடியாக திரும்பப் பெறவேண்டும்.

**ஊராட்சிகளுக்கான மின்கட்டணத் தொகை:** மின்கட்டணம் மிக அதிகமாக உள்ளதால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. ஊராட்சிகள் அதிகப்படியான நிதியை மின்கட்டணமாக செலுத்த வேண்டியிருப்பதால் ஊராட்சிப் பணிகளை பராமரிப்பதற்கு நிதி பற்றாக்குறை ஏற்படுகிறது. மேலும் ஊராட்சிகளுக்காக ஒரு யூனிட் மின் கட்டணச் செலவு ரூ.1.60லிருந்து ரூ.3.40ஆக உயர்த்தப்பட்டு இவ்வாண்டு ரூ.3.40லிருந்து ரூ.3.00ஆக குறைக்கப்பட்டுள்ளது. இருந்தும் பெரும்பாலான ஊராட்சிகள் கட்டணம் பாக்கி வைத்திருப்பதை கருத்தில் கொண்டு கட்டணம் உடனடியாக ஒரு யூனிட் மின் கட்டண செலவான ரூ.1.60 ஆக குறைக்கப்பட வேண்டும். நலிந்த நிலையில் உள்ள ஊராட்சிகளின் மின்கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற தமிழக முதல்வரின் அறிவிப்பை எங்கள் கூட்டமைப்பு வரவேற்கும் வேளையில் இதனை உடனே முறையாக அமுல்படுத்தக் கோருகிறோம்.

**தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 205 நீக்கப்படவேண்டும் :** தமிழக ஊராட்சிகள் சட்டம் 1994ன் அத்தியாயம் 10 பிரிவு 205 அரசு அதிகாரிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மீது மிகுந்த அதிகாரத்தை வழங்குவதால் அவ்வத்தியாயம் நீக்கப்படவேண்டும். உள்ளாட்சி அரசாங்கம் என்பது ஒரு அரசியல் சாசன அரசாங்கமாதலால் மத்திய மாநில அரசுகளின் அதிகாரிகள் அதற்கு பதில் சொல்லும் பொறுப்புள்ளவர்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் ஊராட்சித் தலைவர்களை பதவிநீக்கம் செய்வது சுய சார்புடைய உள்ளாட்சி முறைக்கு எதிரானது. ஆகவே தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 205 நீக்கப்படவேண்டும்.

**கிராம சபை:**

- கிராம சபைக்கான விவாத பொருள் தேவையின்

அடிப்படையில் அந்தந்த கிராம ஊராட்சியால் தான் முடிவு செய்யப்பட வேண்டும். மாவட்ட தலைவர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பொருள்களை அதனுடன் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

- கிராம சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தேவையான அதிகாரம், நிதி ஊராட்சிகளுக்கு அளிக்கப்படவேண்டும். இத்தீர்மானங்களை செயலாக்க ஊராட்சிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை சம்மந்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்புகள்/ துறைகள் கட்டாயம் அளிக்கவேண்டும்.

- கிராம சபைக் கூட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர், ஒன்றிய மாவட்ட வார்டு உறுப்பினர்கள், உள்ளூர் அதிகாரிகள் கட்டாயம் பங்கேற்கவேண்டும்.

- கிராம சபை நடத்துவதற்கான செலவாக தற்பொழுது நிர்ணயக்கப்பட்டுள்ள ரூபாய் 500யை ரூபாய் 2,000 மாக அதிகிரிக்கவேண்டும்.

- கிராம சபை கூட்ட அறிக்கையை பெற்றுகொண்டதற்கான ஒப்புதலை வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட ஆட்சியர் கிராம ஊராட்சிக்கு அளிக்க வேண்டும்.

- மத்திய, மாநில அரசின் அனைத்து திட்டங்களுக்கும் பயனாளிகளின் பட்டியலை கிராம சபைதான் முடிவு செய்ய வேணடும். தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் எவ்வொரு அரசு அதிகாரியும், அரசியல்வாதியும் மாற்றம் செய்ய அனுமதிக்கக் கூடாது.

**அரசியல் சாசன 73வது சட்டதிருத்தத்தின் படி உள்ளாட்சிகளுக்கான 29 துறைகளுக்கான அதிகாரங்கள்:** இந்திய அரசியல் சாசனத்தின் 11 ஆவது அட்டவணையில் ஊராட்சி அரசாங்கத்திடம் மாநில அரசு ஒப்படைக்கலாம் என கூறப்பட்டுள்ள 29 துறைகளுக்கான அதிகாரங்கள் குறித்து, மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய அதிகார, நிதி பரவலாக்கம் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்த தனது தெளிவான கொள்கை முடிவை தமிழக அரசு அறிவிக்கவில்லை. அரசின் உடனடி நடவடிக்கையாக 29 துறைகளுக்கான ஊழியர்கள், மேலாண்மை மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க கோருகிறோம். முதல் கட்டமாக பின்வரும் துறைகளுக்கான அதிகாரங்களை ஒப்படைக்க வேண்டுகிறோம்.

- கல்வி (ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் வளர்ச்சி உள்ளிட்டு)
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- பொதுவிநியோகம்
- வேளாண்மை
- பாசனம், நீர்வளமேம்பாடு மற்றும் நீர்வள பாதுகாப்பு
- நிலச்சீர்த்திருத்தம் மற்றும் நில உபயோக மேலாண்மை
- கிராமப் பொது வளங்கள் மீதான கட்டுப்பாடு
- கனிம வளம்
- சமூகக் காடுகள், சிறுகாடுகளின் வளங்கள்
- சாதி, வருமான சான்றிதழ் விநியோகம்

எவ்வித தொழிற்சாலைகள் மற்றும் ரியல் எஸ்டேட்டுகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் / மாசுக் கட்டுபாடு

29 துறைகளில் உள்ள இனங்களின் கீழ் முறையே வறுமை ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், சமூக நலம் (ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர் நலம் உள்ளிட்டு) நலிவடைந்த பிரிவினர் நலம் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றில் ஊராட்சிகள் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்காக திட்டங்கள் தயாரிக்கவும் அவற்றை செயல்படுத்தவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

**நிர்வாக அதிகாரம் : ஊராட்சிப் பணிகளுக்கு (மத்திய, மாநில அரசு நிதியுதவி பெறும் திட்டங்கள் உள்ளிட்டு) யாதொரு வரையறையுமின்றி நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகாரம் ஊராட்சி மன்றங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.** இது சம்மந்தமாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை நீக்க வேண்டும் என பரிந்துரைக்கின்றோம்.

கிராம ஊராட்சியில் தேவையான பராமரிப்பு பணிகளை குறிப்பாக மின்சாரக் கம்பி பழுதுபார்த்தல், மின் விளக்குகள் பராமரிப்பு போன்ற பணிகளுக்கு அந்தந்த ஒன்றிய அளவில் போதுமான பணியாளர்களை நியமித்து உடனுக்குடன் அப்பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சி

பணியாளர்கள், உதவியாளர், எழுத்தர், மக்கள் நலப்பணியாளர், குடிநீர் தொட்டி இயக்குனர், துப்புரவு பணியாளர்களின் மிகக் குறைந்த மதிப்பூதியம் உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும்.

**கிராமப்பொது வளங்கள், நீர் ஆதாரம் :** அனைத்து பொதுநீர் வள ஆதாரங்களையும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைப்பதற்கான சட்டப்பிரிவு 84 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். ஊராட்சி அரசாங்கச் சட்டத்தின் பிரிவு 159, 160 ல் பொது நிலங்கள் மற்றும் வளங்களில் ஊராட்சி அமைப்புகளின் முடிவுகள் / தீர்மானங்களை ரத்து செய்யவோ, மாற்றம் செய்யவோ மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் நீக்கப்பட வேண்டும்.

அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சிக்குச் சொந்தமான பல ஏக்கர் கணக்கிலான நிலங்கள் பெரும் நிலச்சுவான்தாரர்களிடமும், கோவில் நிலம் என்ற பெயரில் பெரும்பரப்பிலான நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டும் உள்ளன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய் மற்றும் போலீஸ் அலுவலர்கள் ஊராட்சித் தீர்மானத்திற்கு கட்டுப்பட்டு ஒத்துழைக்க வேண்டும் என்ற வழிவகை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் இல்லை. இதனால் ஊராட்சித் தலைவர்கள் இந்த ஆக்கிரமிப்புகள் மீது நடவடிக்கை எடுக்க உதவியின்றி உள்ளனர். ஆக்கிரமிப்புகளை அகற்றும் அதிகாரம், ஒரு நிர்வாக அதிகாரமாக ஊராட்சித் தலைவருக்கே வழங்கப்பட வேண்டும்.

**கிராம ஊராட்சியும் கிராம வரைபடம் மற்றும் கிராமப் பொது வளங்கள் : கிராம வரைபடம் மற்றும் கிராம பொது வளங்கள் போன்றவை குறித்த ஆவணங்களைப் பராமரித்துவருவதற்குத் தேவையான அனைத்தும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.** கிராம வரைபடங்களை மறுவகைப்படுத்துதல், நில உபயோக மேலாண்மை, பொதுச் சொத்து வளங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் குறித்த அனைத்து பரிந்துரைகளும் கிராம சபையின் ஒப்புதலுக்குப் பிறகு ஊராட்சியால் மேற்கொள்ளும்படிக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமே மணல் குவாரிகளுக்கு அனுமதி வழங்கவும் கண்காணிக்கவும், அதிக சுரண்டல் மற்றும் சட்ட விரோத குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

**வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் பட்டியல்:** இது ஊராட்சிகளைக் கொண்டே இறுதி செய்யப்பட வேண்டும். தகுதியான குடும்பங்கள் மட்டுமே இப்பட்டியலில் இடம் பெறுவதை கிராம ஊராட்சிகளை மிகச் சரியான முறையில் செய்ய முடியும். கிராம சபை இறுதி செய்தப் பட்டியலை எந்தவித மாற்றமுமின்றி, அரசியல் கட்சி குறுக்கீடு இன்றி மாநில, மத்திய அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசுத் துறைகள் இதில் தலையிடக்கூடாது.

**சான்றிதழ் வழங்குதல்:** சாதி, வருமானச் சான்றிதழ் வழங்கும் பொறுப்பு வருவாய்த் துறையிடமிருந்து மாற்றப்பட்டு, ஊராட்சிகளால் வழங்கப்படும்படி சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டும். **இலவசப்பட்டா வழங்குவதற்கு ஊராட்சி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படும் பட்டியலில் உள்ள நபர்களுக்கே மாவட்ட வருவாய் நிர்வாகம் பட்டா வழங்க வேண்டும். புதியதாக வழங்கப்படும் “பட்டா” எதுவாக இருந்தாலும் ஊராட்சி மன்றத்தின் அனுமதியோடு வழங்கப்பட வேண்டும்.**

**மாவட்டத் திட்டமிடல் குழு :** மாநில அரசு மாவட்டத் திட்டமிடல் குழுக்களுக்கு தேர்தல் நடத்தியபின்னும், இத்திட்டமிடல் குழுக்களுக்கு எந்தவித செய்லபாடோ, அதிகாரமோ, நிதியாதாரமோ வழங்கப்படாதது இவற்றின் செயல்படாத்தன்மைக்கே வித்திடும். இந்திய அரசியல் சாசனத்தின் விதி 243 D ன்படி உருவாக்கப்பட்டுள்ள **இம்மாவட்டத் திட்டமிடல் குழுக்களுக்கு அதிகாரம் மற்றும் கடமைகளை விவரித்து உடனடியாக மாநில அரசு சட்ட அறிவிக்கை (Gazette) ஒன்றை வெளியிடக் கோருகிறோம்.**

**மதிப்பூதியம் :** ஊராட்சி மன்ற பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைக்கான அவர்களுடைய உழைப்பிற்கு ஊதியமாக குறைந்த பட்சம் ரூபாய் 5,000/– வழங்கக் கோருகிறோம். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான பயிற்சி குறிப்பாக அவர்களின் அதிகாரங்கள், கணக்கு பராமரிப்பு, கூட்டங்கள் நடத்ததல், திட்டம் செயலாக்கம் போன்றவற்றிற்கு தேவையான பயிற்சிகள் ஒன்றிய அளவில் நடத்தப்பட வேண்டும்.

**ஊராட்சிகளில் பெண் தலைவர்களை அதிகாரம் இழக்கச் செய்யும் காரணிகள்**

- சாதி, பாலியல் மற்றும் வர்க்கப் பாகுபாடுகளினால் பெண்கள் இழிவாக நடத்தப்படுவது தொடர்ந்து வருகிறது. ஒரு புறம் நிர்வாக ரீதியிலான

குழப்பங்களும் மறுபுறம் அவரது பாலினத்தை பயன்படுத்தி இழிவாக நடத்துவதும் தொடர்ந்து வருகிறது. அனைத்து தடைகளையும் மீறி தைரியமாக செயல்படும் பெண்களுக்கு எதிராக வன்முறைகளும் அதிகரித்து வருகிறது. இத்தகைய மனித உரிமை மீறல்களால் பிற பெண்கள் அரசியலில் தைரியமாக பங்கேற்பதற்கு தயக்கத்தை ஏற்படுத்துகிறது. இதில் பெண் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது.

- ஊராட்சிப் பணியாளர் அனைவரும் தலைவரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று சட்டத்தில் கூறியிருந்தாலும், கிராம ஊராட்சி எழுத்தர் பெண் தலைவர்களுக்கு கட்டுப்படுவதில்லை. இவர்களது போக்கினால் ஊராட்சியில் ஊழலை ஒழிப்பது என்பது பெண் தலைவர்களுக்கு ஒரு பெரும் சுமையாக உள்ளது.

- மேலும் ஆண்களின் ஊழல் செய்யும் தன்மை, கிராமப் பொதுச் சொத்துக்களையும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினைக் கையாடுதல் போன்ற செயல்களினால் பெண்கள் ஆதரவற்ற நிலையில், அதனை ஏற்றுக் கொள்ள நிர்பந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர்.

- பெண் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டாலும், ஆண்களால் உபயோகிக்கப்படும் இழிவான வார்த்தைகளால், அவர்களால் சுதந்திரமாக கருத்துக்களை கூற முடிவதில்லை. ஆகையால் இவர்கள் ஆண்கள் முன்னிலையில் தங்களுடைய கருத்துக்களை கூறுவதற்கு தயங்குகிறார்கள்.

- தமிழகத்தில் கிராம ஊராட்சி வங்கி கணக்கு தலைவர், துணைத்தலைவரால் கூட்டாக இயக்கப்படுவதால், தலைவர் ஆணாகவும், துணைத்தலைவர் பெண்ணாகவும் இருக்கும் பட்சத்தில், தாங்கள் ஏற்றுக்கொள்ளாத காரியங்களும் இப்பெண்கள் காசோலையில் கையெழுத்திட வற்புறுத்தப்படுகிறார்கள்.

**தலித் ஊராட்சிமன்ற தலைவர்கள் எதிர்கொள்ளும் சாவல்கள்:**

காசோலை புத்தகத்தை (செக் புக்ஸ்) துணைத் தலைவர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, அனைத்துப் பதிவேடுகள், கணக்கு புத்தகங்களும், அலுவலக சாவியையும துணைத்தலைவர் மற்றும் பஞ்சாயத்து உதவியாளர் (Clerical Assistant) கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, பஞ்சாயத்து தலைவர் பஞ்சாயத்து அலுவலகத்தில் நாற்காலியில் உட்காரவும் கூட அனுமதி மறுக்கப்படுகிறது, துணைத் தலைவரின் விருப்பதிற்கேற்ப பஞ்சாயத்து வேலைகள் மாற்றியமைக்கப்படுகின்றன, கேள்வி எதுவும் கேட்காமலேயே காசோலையில் கையெழுத்து போடுமாறு தலைவர்கள் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள், கேள்வி கேட்டால் அவர்களை மிரட்டுவது உடல்ரீதியாக துன்புறுத்துவது போன்ற அத்துமீறல்களை தமிழகத்தின் பெருவாரியான ஊராட்சிகளில் காண முடிகிறது.

- தலித் பஞ்சாயத்து தலைவர்களை மிரட்டுபவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை போதுமான அளவிற்கு பிரயோகிக்காமல் இருப்பதும் தலித் மக்கள் தொடர்ந்து பாதுகாப்பற்ற சூழலில் வாழக்காரணமாகின்றது. பல்வேறு குழுகள் நடத்திய ஆய்வில், ஆதிக்க சாதியினருக்குக் கட்டுப்பட்டும், பலவித பாகுபாடுகள், சரிசமமற்றநிலை மற்றும் துன்பங்களை தலித் தலைவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

- துணைத் தலைவர்கள் பெரும்பாலும் ஆதிக்க சாதியனராக இருப்பதால் தொடர்ந்து தலித் பஞ்சாயத்து தலைவர்களை மிரட்டி வருகின்றனர். பஞ்சாயத்து நிர்வாகத்தை அவர்கள் கட்டுப்படுத்துவதற்கு வசதியாக தலித் தலைவர்களை சுதந்திரமாக செயல்படவிடாமல் தடுக்கிறார்கள். அல்லது, கீழ்படிந்து நடக்குமாறு தலைவர்களை கட்டாயப்படுத்துகிறார்கள். ஆதிக்க சாதியினருக்கு பினாமியாக செயல்பட, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலித் பஞ்சாயத்து தலைவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

- ஆதிக்க சாதி உதவியாளர் கட்டுப்பாட்டினால் சுதந்திரமாக செயல்படமுடியாத தலித் தலைவர்களை கொண்ட பஞ்சாயத்துகளில் தற்போதுள்ள உதவியாளர் மாற்றப்படவேண்டும். தலித் உதவியாளரை புதிதாக நியமனம் செய்ய பஞ்சாயத்து தலைவர்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். தலித் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்துபவர் மீதும், அவர்களை இழிவாக பேசி / நடத்துபவர் மீதும், அவர்களை கட்டாயப்படுத்தி காசோலையில் கையெழுத்து போடச் செய்பவர் மீதும், காசோலை மற்றும் பதிவேடுகளை ஒப்படைக்காமல் இருப்பவர்

மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- தலித் தலைவர்கள் எந்தவித இடையூறும் இன்றி வளர்ச்சி பணிகளை முறையாக நிறைவேற்ற, அவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ள ஊராட்சியின் நில ஆக்கிரமிப்பாளர்கள், ஆதிக்க ஜாதியினர், ஊராட்சியில் அழிவு பூர்வ திட்டங்களை செயல்படுத்துவோரிடமிருந்து தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். தலித் பெண் தலைவர்கள் மீதான வன்முறை வழக்குகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் (SC/ST ACT) மூலம் வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம்

- ஊரக ஊதிய அமைப்பை ஒரு நிரந்தர தன்மைக் கொண்டதாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின்படி, தினக்கூலி ரூ.80 என்பது பணி மேற்கொள்ளும் அனைவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும். ஊதியத்தை கால தாமதமின்றி வழங்கவேண்டும். அதே சமயம் உடனடியாக இந்த ஊதியத்தை ரூ.100 என அதிகரித்து வழங்க வேண்டும்.
- பணியிடத்தில் மேற்பார்வையாளராக 50 நபர்களுக்கு ஒருவர் என நிர்ணயம் செய்து அந்நபருக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
- பணியை துவங்குவதற்கு ஏதுவாக பணியிடத்தில் உள்ள மரங்கள் பிற இடற்பாடுகளை களைந்தெறியவதற்கான அளவீடு என்ஜினியரால் முடிவு செய்யப்பட்டு ஊராட்சி ஒப்புதல் பெற்று அதற்கான நிதியை மாநில அரசு ஏற்பாடு செய்து தரவேண்டும்.
- ஊராட்சிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தபடுவது குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியரால் மாதம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும்.
- மாவட்ட, ஒன்றியளவில் இத்திட்டம் குறித்த குறைகளை களைந்தெறிவதற்கான குறைதீர்ப்பு அதிகாரி அல்லது குழு அமைக்கப்படவேண்டும்.
- தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் நடைபெற்ற பணிகளை அளவீடு செய்வதற்கு 6 ஊராட்சிகளுக்கு ஒரு என்ஜினியர் என்பதால் பணியை அளவிட்டு கொடுப்பது, செய்து முடிக்கப்பட்ட பணியை அளவிடுவது போன்றவை காலதாமதமாகிறது. இதனை சரிசெய்ய உரிய நடவடிக்கை மூன்று ஊராட்சிகளுக்கு ஒரு என்ஜினியர் என நியமிக்க வேண்டும்.
- தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில்,பணியிடத்தில் செய்து தரப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ள குடிநீர் வசதி, மருத்துவ வசதி, நிழற்குடை, குழந்தைகள் காப்பகம் போன்றவற்றை மாநில அரசின் நிதியிலிருந்து உடனடியாக செய்து தரப்பட வேண்டும்.
- எவ்வகை மண் தன்மையாக இருந்தாலும் அதற்கேற்ப ஒரு நபர் ஒரு நாளுக்கு ரூ.80 கூலியாக பெறும் அளவிற்கு அளவீடு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

## சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

சிறப்பு பொருளாதார மண்டலத்திற்காக தொழிற்சாலைகளுக்காக ஊராட்சியினர் நிலங்கள் குறிப்பாக விவசாய நிலங்கள் கையகப்படுத்துவது கூடாது. இதனால் உள்ளூர் பொதுவளம் சீரழிக்கப்பட்டு வேலையில்லா திண்டாட்டமும் ஏற்படுகிறது. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

**சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி நிதி :** சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நாங்கள் கோருவது அவர்களது தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை ஊராட்சிகள் மூலமே செயல்படுத்த வேண்டும் என்பதே. **சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் நிதி, வளர்ச்சிப் பணிக்கு பயன்படுத்தப்படும்போதும் அந்தந்த ஊராட்சி மன்ற பிரதிநிதிகளை கட்டாயம் கலந்து ஆலோசித்து திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.**

**மூன்றடுக்கு ஊராட்சிகளை இணைத்தல் : மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குள் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.** கிராமசபையிலிருந்து திட்டமிடல் துவங்கி அது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளின் திட்டத்தால் தொகுக்கப்பட்டு மாவட்ட திட்டமிடல் குழு

மாவட்டத்திற்கான திட்டத்தைத் தயாரிக்கும் முறை கொண்டுவரப்பட வேண்டும்.

வளர்ச்சிப் பணிகளுக்கு திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்த ஒட்டுமொத்த நடைமுறையும் ஊராட்சிகளின் மூன்றடுக்குகளுக்கும் தெளிவாக அரசு ஆணை மூலம் வழங்கப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் அவர்களது சேவைகள் கிராம ஊராட்சியால் கோரப்பட்டால் தவிர இந்த நடைமுறையில் அவர்கள் எந்தப் பங்கும் வகித்தல் கூடாது. கிராம ஊராட்சியின் ஆண்டுத் திட்டத்தின் நகல் ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஊராட்சியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்தத் தொடர்பு ஒரு முக்கிய தேவையாதலால், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் மூன்றடுக்கு ஊராட்சியிலும் தொடர்பை ஏற்படுத்தத் தேவையான மாற்றங்கள் கொண்டுவருவது அவசியம்.

**மாவட்ட ஊராட்சியை அதிகாரமுடையதாக்குவது :** மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்பு ஆலோசனை வழங்குவதாக மட்டும் இருப்பதற்கு பதில் மாவட்ட ஊராட்சியானது ஊராட்சி அரசாங்கம் குறித்து முடிவு செய்யும் ஒரு அதிகார அமைப்பாக கருதப்பட்டு ஊராட்சிகளுக்கு தேவையான நிதி நிர்வாகப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் கீழ் மற்றும் அதன் கீழ் வரும் அனைத்து தலைப்பு மற்றும் உப தலைப்புகளின் நிதிஒதுக்கீடுகளும் மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கின்றோம்.

பொதுக் கல்வி, மருத்துவம் பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல் துப்புரவு, வீட்டு வசதி, ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், சத்துணவு, சமூகப் பணிகள், ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள், தரிசு நில மேம்பாடு, ஊரக வேலைவாய்ப்பு, ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம், சிறுபாசனம், நவீன எரிசக்தி ஆதாரங்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடுகளும், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு போன்றவை அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சியால் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும்.

## கீழ்காணும் மூன்றாவது மாநில நிதி ஆணைய பரிந்துரைகளையும் ஏற்க கோருகிறோம்

அரசமைப்பு சட்டப்பிரிவு 243 I மற்றும் 243 Y மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த மாநில சட்டங்களின் படி 2.12.2004 இம் மாநில அரசால் அமைக்கப்பட்ட மூன்றாவது மாநில நிதி ஆணையம் அதன் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை 30.9.2006ல் மேதகு ஆளுநர் மற்றும் முதலமைச்சர் அவர்களிடமும் அளித்தது. பரிந்துரைகள் மற்றம் அரசமைப்புச் சட்டப்பிரிவு 243 I (4) மற்றும் 243 Y (2) இன்படி மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கை.

- மாநிலத்தின் சொந்த வரிவருவாயிலிருந்து மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக்கான 2007–2012 வரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொகுப்பு 'ஆ' வின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் நிதிப் பகிர்வு ஒவ்வொரு ஆண்டுக்கும் 10 சதவீதமாக இருக்க வேண்டும் என்ற பரிந்துரையை இந்த ஆண்ட முதலே அமல்படுத்த வேண்டும் அதனை தொடர்ந்து உள்ளாட்சிகளுக்கான நிதி குறைந்து 30 சதவீதமாக அதிகரிக்க மாநில அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- 1997 முதல் 2008 வரையுள்ள ஆண்டுகளுக்கான **கேளிக்கை** வரி நிலுவைத் தொகைகள் அதிகபட்ச அளவிலான வட்டியுடன் உடனடியாக சரிகட்டப்பட வேண்டும். கேளிக்கை வரியை 1 சதவீதம் வசூல் கட்டணமாக அரசு இருத்திக் கொண்டு மீதி 99 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

- **முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி** வசூலில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பகுதி முறையாக சரிகட்டப்பட வேண்டும். 2002–2008ல் சரிகட்டப்பட வேண்டிய நிலுவைத் தொகை உடடினயாக சரிகட்டப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட மாதத்தில் வசூலிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி அடுத்த மாதம் 15–ம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியரால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சரிகட்டப்பட வேண்டும்.

- தலவரி / தலமேல்வரி ஏற்கனவே அரசு ஆணையிட்டுள்ளவாறு 1994–ம் சட்டத்தின் 167–ம் பிரிவிற்குத் திருத்தம் செய்து தலவரியினை குறைந்தபட்சம் ரூ.2/– எனவும் தலவரி உச்ச வரம்பினை ரூ.1/– யிலிருந்து 3/–

ஆகவும் உயர்த்தி விதிக்கலாம்.

- ஒவ்வொரு ஆண்டுக்கான ஜமா பந்தி முடிவடைந்து பின்னர் செப்டம்பர் 15–ஆம் தேதிக்குள் தலவரி / தலமேல்வரிகள் சரிக்கட்டப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் காலதாமதமாக சரிகட்டப்பட்ட காலத்திற்கு மாநில அரசு இந்திய அரசு ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் வழிவகை முன் பணங்களுக்கான வட்டி வீதத்திற்கு குறையாத வீதத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வட்டி அளிக்க வேண்டும். கர்நாடக மாநிலத்தில் இருப்பது போன்று தலவரி / தலமேல்வரி விதிப்புக்குப் பதிலாக ஊராட்சி வரி என்ற வரியினை விதிப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழுவினை அரசு அமைத்து, வரிவிதிப்பு மற்றும் வரி வசூல் செய்யும் பணியினை கிராம நிர்வாக அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம்.

- சிறுகனிமங்களின் வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்தத்தக்க தொகை ஒதுக்கீட்டினை பயன்படுத்த முடியாமல் காலங்கடந்து சென்று விடுவதை தவிர்க்கும் பொருட்டு பகிர்ந்தளிக்கும் வருவாய் அதே நிதி ஆண்டில் காலாண்டு அடிப்படையில் சரிக்கட்டப்பட வேண்டும். இதனை தகுந்த கிராம ஊராட்சிகள் தகவலுக்காக அப்பகுதிகளில் எடுக்கப்படும் கனிமங்கள் குறித்த வரைபடங்கள் அளிக்கப்பட Sketches வேண்டும்.

- ஊக்க நிதியை பகிர்வு செய்து ஆண்டின் கடைசியில் விடுவிக்கும் வழக்கத்தை நிறுத்தி, ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டாவது காலாண்டில் ஊக்க நிதியை விடுவித்துவிட வேண்டும். திட்ட நிதியிலிருந்து 1 சதவீதம் தொகை கிராம ஊராட்சிகளின் அவசரத் தேவையெனக் கருதப்படும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இந்நிதி மாநில நிதி ஆணைய பகிர்வு நிதியில் ஒரு பகுதியாக இருக்கக்கூடாது.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை ஆகியவற்றின் கொள்கை விளக்கக் குறிப்புகளை சட்ட பேரவையின் ஒப்புதலுக்காக வைக்கும்போது அவற்றுடன் நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மீது வெளியிடப்பட்ட ஆணைகள் பற்றிய விவரங்களை சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

- நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகளைச் செயல்படுத்துவதை ஆய்வு செய்யும் பொருட்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தனிக்குழு ஒன்றை அமைக்க அரசு பரிசீலிக்கலாம்.

- உள்ளாட்சி அமைப்புகள் திறம்படச் செயல்படுவதை உறுதி செய்ய அதற்கான அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பது போல் உள்ளாட்சி அமைப்புக் குழுக்களை அமைக்கலாம். இக்குழு திறம்பட செயல்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும்.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மீதான புகார்களை விசாரிப்பதற்கு அண்டை மாநிலங்களான கேரளம் மற்றும் கர்நாடகாவைப் போல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனியாக தீர்ப்பாயம் போன்ற அமைப்பு அமைக்கப்பட வேண்டும் என முதலாம் மற்றும் இரண்டாம் மாநில நிதி ஆணையங்களின் பரிந்துரைகளை வலியுறுத்துகிறோம்.

**இந்த இதழ் பற்றிய**
**உங்கள் கருத்துகள் / விமர்சனங்களை**
**ஆவல்வுடன் எதிர்நோக்குகிறோம்**

# தமிழ்நாடு ஊராட்சி மன்றத்தலைவர்கள் கூட்டமைப்பு

தமிழ்நாடு ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டமைப்பின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் 28.09.2008 அன்று சென்னையில் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் S.M. முனியாண்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நமது தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு சார்பாக கலந்து கொண்டு “உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகள் குரலின் சென்ற இதழ்கள், நமது கூட்டமைப்பின் தீர்மானங்கள், ஊராட்சிகள் பற்றிய கையேடுகள் ஆகியவற்றை சில பங்கேற்பாளர்களுக்கு அளித்தோம்.

கூட்டத்தில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் 100க்கும் மேற்பட்ட ஆண் ஊராட்சி மன்றத்தலைவர்களும், சுமார் 10 பெண் தலைவர்களும் பங்கேற்றனர். கூட்டத்திற்கு திரு.S.M.முனியாண்டி, தலைமைவகிக்க, திருஷேக் முகமது முன்னிலை வகித்தார். ஒவ்வொரு மாவட்டம் சார்பாகவும் சில நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 15 அம்ச கோரிக்கைகள்

1. ஊராட்சிக்கு வழங்கப்படும் மாநில நிதிக்குழு மானியத்தில் இருந்து உள்கட்டமைப்பு என்று 50% நிதியை பிடித்தம் செய்வதை நிறுத்தம் செய்ய வேண்டும்.

2. ஊராட்சி மன்றங்களுக்கு மாநில அரசு தற்போது ஊராட்சி நிதி 8% வழங்கி வருகிறது. இதைக் கொண்டு கிராம ஊராட்சி வளர்ச்சிப்பணிகளை சிறப்பாகச் செய்து முடிக்க இயலவில்லை. ஆகையால் கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களில் ஊராட்சிக்கு வழங்கப்படும் 33% நிதி வழங்குவது போல் தமிழ்நாட்டிலும் 8% பதிலாக 33% ஊராட்சி நிதி வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

3. தலைவருடன் துணைத்தலைவர் போட்டி மனப்பான்மையிலும், உள்ளூர் போட்டியாளர்கள் தூண்டுதலின் பேரிலும் செக்கில் (காசோலை) கையொப்பம் இடபெரும்பாலனோர் ஊராட்சிகளில் உதவி தலைவர் கையொழுத்து செய்ய மறுத்து வருவதால் ஊராட்சியின் வளர்ச்சி, பொது மக்களின் அடிப்படைத் தேவைகள், நலன் கருதி குறைந்த பட்சம் ரூ.50,000/–க்கு தலைவர் ஒரு நபர் மட்டும் காசோலைகளில் கையொப்பம் இட்டு செலவினங்கள் செய்ய அரசு ஆவண செய்ய வேண்டும்.

4. ஊராட்சியால் தற்பொழுது ஒரு தெரு விளக்குக்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு பராமரிப்புச் செலவான ரூ.200/–ஐ இரு மடங்காக உயர்த்தி தர அரசு ஆவண செய்ய வேண்டும்.

5. தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளுக்கு ஒரு குடும்பத்துக்கு ஆண்டுக்கு 100 நாள் வேலை மெசர்மண்ட் (அளவு) மற்றும் 7 மணி நேரம் உடல் உழைப்பு செய்வதால் தினக்கூலி ரூ80/– சம்பளம் என்ற உச்ச வரம்பைத் தளர்த்தி இன்றைய விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு குடும்பத்துக்கு 200 நாள் வேலையும் தினக்கூலி ரூ.120/ம் நேரத்தைக் கணக்கிடாமல் மெசர்மெண்ட் மட்டும் கணக்கிட்டு வேலை முடிந்தவுடன் பணியைவிட்டு வெளியேறலாம் என்றும் பொது மக்கள் நலன் கருதி அரசு ஆவண செய்ய வேண்டும்.

6. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு தினக்கூலி (சம்பளம்) ரூபாயை

வங்கிகள் மூலமாக வழங்கும் திட்டத்தை தளர்த்தி விட்டு பொது மக்கள் நலன் கருதி தற்போது நடைமுறையில் உள்ளது போல் மக்களுக்கு ஊராட்சி மூலம் நேரிடையாக ஊதியம் வழங்க ஆவண செய்ய வேண்டும்.

7. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதியை ஊராட்சிக்கு நேரிடையாக வழங்கி ஊராட்சி மூலமாக (டெண்டர்) நடைபெற அரசு ஆவண செய்ய வேண்டும்.

8. ஊராட்சி மன்றத் தலைவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பதவி நீக்கம் செய்யும் அரசு ஆணை எண் 205—ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

9. விலைவாசி உயர்வை கருத்திற் கொண்டு ஊராட்சி எழுத்தர் (கிளார்க்)களுக்கு O.H.T ஆப்பரேட்டர் துப்புரவுத் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு தற்போது வழங்கி வரும் ஊதியத்தை இருமடங்காக உயர்த்தித்தர அரசு ஆவண செய்ய வேண்டும்.

10. ஊராட்சிக்கு மத்திய, மாநில அரசு வழங்க வேண்டிய நிலுவை நிதியை உடனே வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

11. ஊராட்சிக்கு அரசு வழங்கி வரும் வீட்டுவாரி ஈட்டு மானியத்தை முன்பு போல் மூன்று மடங்காக வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

12. M.P.M.L.A. ஆகியோர்களுக்கு தொகுதி வளர்ச்சி நிதி அரசு வழங்குவது போல் ஊராட்சித் தலைவர்களுக்கும் ஊராட்சி மேம்பாட்டு நிதியாக ஆண்டுக்கு ரூ.10 இலட்சம் வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

13. வீட்டு மனைகளுக்கு தடையில்லாச் சான்று (N.O.C) வழங்கும் அதிகாரம் முன்பு போல் ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

14. ஊராட்சி மன்றத்தலைவர் பதவி கட்சி சார்பற்றது. தலைவர் ஊராட்சி மன்றத்தின் முழு நேரப் பணியாளராகவும் செயல் அலுவலராகவும் பணியாற்றுவதால் M.P.M.L.A ஆகியோர்களுக்கு மாதந்திர ஊதியம் வழங்குவது போல் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் மாத ஊதியம் வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

15. ஊராட்சிக்கு வழங்கப்படும் இரண்டாவது கணக்கு (மின்கட்டணம் மற்றும் குடிநீர்) நிதியில் அந்த ஆண்டு செலுத்திய மின் கட்டணம், குடிநீர் கட்டணம் போக மீதத் தொகையை ஊராட்சி நிதிக்கு மாற்றம் செய்து கூடுதல் செலவீனமாக ஊராட்சிக்கு ஏற்படும் தெருவிளக்கு பழுதுபார்தல், கூடுதல் தெருவிளக்கு அமைத்தல், பைப்லைன் அமைத்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கூட்டத்தின் முடிவில் தீர்மானித்திருந்தபடி, 6.10.2008 அன்று உள்ளாட்சித் துறை செயலாளர் திரு.அசோக் வரதன் ஷெட்டி அவர்களை சந்தித்தோம்.**





வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண். 10, தாமஸ்நகர், சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015.

தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905, மின் அஞ்சல் : hrf@md3.vsnl.net.in

இணையதளம் : www.voicesofstruggletn.org